


உ
*சிவமயம்*
# ஆத்மஜோதி
*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 6: இதழ் 1
*பார்த்திப வருடம்*
*ஐப்பசி - மார்கழி*
*திருவள்ளுவர் ஆண்டு*
*2036*

**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அருள் வரலாறு
4. ஒப்பிலாக் குருவே வாழி
5. பாபாவுக்கு வயது 80
6. கருமத்தைச் செய்
7. திவ்வியம் பழுத்த சைவமும்
. பவ்வியம் செழித்த நாவலரும்
8. Catechism on Saivaism
9. திருவாதவூரடிகள் புராணம்
10. திருமுறை அடியார்களின் திருத்தல யாத்திரை
11. மதுரை ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள்
12. போகாத இடந்தனிலே போகவேண்டாம்
13. ஒல்லாந்து யாத்திரை
14. சமயச் செய்திகள்
15. அன்பு நெறி ஆசிரியையின் மணிவிழா
16. அமரத்துவம் அடைந்துவிட்ட ஆன்றோர் இருவர்
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை





உ
# பேரூராதீனம்
# சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பேரூராதீன முதல்வர் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் முத்துவிழா நிறைவு நிகழ்வுகள் 29-09-2005 காலை முதல் 30-09-2005 நண்பகல்வரை பேரூராதீனத் திருமட வளாகத்திலும் 30-09-2005 பிற்பகல் முதல் 01-10-2005 இரவு முடிய கோவை அவிநாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திலும் சிறப்பாக நடைபெற்றன. 02-10-2005 தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணாக் கரின் குடும்பத் திருவிழாவும் முத்துவிழா ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பெற்றது.

மேலும் திருப்பூரிலுள்ள பள்ளிகளும் பிற பல அமைப்புகளும் ஒன்றிணைந்து அடிகளாரின் முத்துவிழாவைக் கொண்டாடினர். அதனையொட்டித் திருப்பூர் பத்தர் பேரவை சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அடிகளார் தமிழுக்கும் சைவத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் அகில அமைதிக்கும் ஆற்றிவரும் பணிகள் சொல்லிமுடியா. பள்ளிகள் மட்டும் நான்கு நடத்துகின்றார். ‘அன்பு இல்லம்’ என்ற அமைப்பு மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவும் கல்வியும் நல்கிவருகின்றார். பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தி அவை மூலம் உதவித் தொகைகள் வழங்கி மக்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்திவருகின்றார். அவரது நலப்பணிகளுக்கு உதவ விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இது:

அருள்மிகு சாந்தலிங்கர்
முத்தமிழ் ஆய்வு அறக்கட்டளை பேரூராதீனம்
பேரூர்
கோயம்புத்தூர் - 641010
தமிழ்நாடு
இந்தியா

அடிகளார் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நற்பணிகளைத் தொடர எல்லாம் வல்ல சிவபுரத்தரசை வணங்கி வாழ்த்துகின்றோம்.

அவரது பணிகளை மதிக்குமுகமாக ‘ஆத்மஜோதி’ ஐப்பசி-மார்கழி இதழை அவருக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

- வி.கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

மல்லாகம்
பழம் பிள்ளையார்

பொல்லாத வினையெல்லாம் போக வைப்பார்
பொருளான பொருளெல்லாம் பொலிய வைப்பார்
செல்லாத வாக்கெல்லாம் செல்ல வைப்பார்
செயற்கரிய செயலெல்லாம் செய்ய வைப்பார்
நில்லாத உலகைநீள் வீதி யோரம்
நிலையாக நெக்குருக நிற்க வைப்பார்
மல்லாகப் பழம்பிள்ளை யவர்ம லர்த்தாள்
வணங்குவார்க் கேதுகுறை வாழ்வி லாமே. (18)

தெல்லிப்பளை
காசி விநாயகர்

அத்தனே ஆதியே அந்தம் இல்லா
ஆனைமா முகத்தனே யருட்கண் ணானே
சித்தனே சித்தாந்த வித்தே சொத்தே
சிந்திக்கச் சிந்திக்கத் திகட்டாத் தேனே
முத்தனே முன்னேற முயல்வார் கெல்லாம்
முதல்வனே கல்வியில் முன்னிற் கின்ற
வித்தையார் தெல்லியூர் விளங்கும் காசி
விநாயகா எமக்கென்றும் வேண்டும் நீயே. (19)

அளவெட்டி
கும்பழாவளைப் பிள்ளையார்

வாடாத தேவருறை வான மாகும்
வாடுபவர் வளர்ந்தோங்கும் வைய மாகும்
நாடோறும் மறையோதும் நாடு மாகும்
நாகசுர தவிலோசை நகரு மாகும்
காடேகக் கருதுபவர் வீடு மாகும்
கயிலாய மென வெண்ணிக் கசிந்து நாளும்
கோடானு கோடியடி யார்கள் கூடும்
கும்பழா வளைப்பிள்ளை கோயி லாமே. (20)





அளவெட்டி
அழகொல்லை விநாயகர்

வெறிவாதக் கூட்டத்தை விட்டு நீங்கி
மெய்ஞ்ஞானத் தேட்டத்தை வேண்டு வாயேல்
சிறுகால உலகியலிற் சிக்கு ணாது
திருப்பணிகள் செய்துய்யச் சிந்திப் பாயேல்
மறைநூல்கள் வழிநின்று மக்கள் வாழ்வு
வளமெய்த உழைத்தற்கு மனம்வைப் பாயேல்
அறிவாளர் வாழ்கின்ற அளவை யூரின்
அழகொல்லை விநாயகரை அடைவாய் நெஞ்சே. (21)

அளவெட்டி
பெருமாக்கடவை விநாயகர்

வல்வினைகள் போக்கியருள் செய்ய வல்லார்
வரவுள்ள தீமைகளுங் கொய்ய வல்லார்
சொல்லரிய வரம்பெற்ற சூரை வென்றார்
தொல்வேதம் முழுவதிலும் தொக்கு நின்றார்
பல்கலையும் பாங்குறவே வளரு கின்ற
பண்புமிகு அளவையம் பதியின் மேன்மை
சொல்லுபெரு மாக்கடவை தொடர்ந்து வைகும்
தும்பிமுகப் பிள்ளைதுயர் துடைப்ப ராமே. (22)

அளவெட்டி - மல்லாகம்
குருக்கள் கிணற்றடி விநாயகர்

தொழக்கண்டும் உதவாரைத் தூற்று வாரை
சொன்னசொற் காவாத சூழ்ச்சி யாரை
வழக்காடு மன்றேறிப் பொய்சொல் வாரை
வழியற்ற ஏழைகளை வாட்டு வாரை
ஒழுக்கத்தை ஓம்பாரை துர்க்கை யோடும்
ஒப்பற்ற மல்லாகப் பதியை ஓம்பும்
கிழக்கெழுசெங் கதிர்போலக் கிளர்கு ருக்கள்
கிணற்றடிவி நாயகர்தாம் கேட்பா ராமே. (23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அருள் வரலாறு

அடிகளார் அவர்களின் பிறப்பு புண்ணியப்பிறப்பு எனப் போற்றத்தக்கதாகும். இவர் பிறந்த ஊர் அவிநாசி வட்டம் முதலிபாளையம் என்னும் ஊராகும். இவருடைய தந்தையார் தவத்திரு. சிவராமசாமி அடிகள் என்னும் பெயரினர். இவர் சிரவணபுரம் கௌமார மடாலயத்தைத் தோற்றுவித்த தவத்திரு. இராமானந்த அடிகளோடு தொடர்புடையவர். கீரணத்தம் தவத்திரு மருதாசல அடிகளைக் குருவாகக் கொண்டவர். இராமானந்த அடிகளையும் மருதாசல அடிகளையும் தமது தோட்டத்தில் தங்கியிருக்கச் செய்து பணிவிடை புரிந்து அவர்களாலேயே விநாயகப் பெருமான் திருக்கோயில் அமைத்துக் கொடுக்கப்பெற்று விநாயகர் வழிபாடும் வேற்பூசையும் செய்து வந்தவர்கள் தவத்திரு சிவராமசாமி அடிகள் ஆவர். இவருடைய அருட்துணைவியராக அமைந்த கப்பிணி அம்மையார், கணவனாருடைய சமயநெறி வாழ்வுக்கு உறுதுணையாய் 'மனையறத்தின் வேராய்' அமைந்து விளங்கியவர்கள். இப்பெற்றோர்களின் பெருமையினையும் புண்ணியத்தினையும் விளக்கும் படியாக இவர்களுக்கு மூன்றாவது மகவாகக் குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகம் நாளில் அவதரித்தார் நமது அடிகளார். இவரது பிறப்பு "தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்த ஞானத்தை நண்ணுதல்" எனவரும் மெய்கண்டாரின் திருவாக்கிற்கு ஏற்பத் தோன்றிய அருட்பிறப்பாகும்.

அடிகளார் அவர்கள் வழக்கப்படியே இளமையில் தொடக்கக் கல்வி கற்றுத் தமது 15ஆவது வயதில் 1941ஆம் ஆண்டு சிரவணபுரம் கௌமார மடாலயத்திற்கு வந்து மடாலயத் திருப்பணிகள் செய்து வரலாயினர். நாளடைவில் தவத்திரு. இராமானந்த அடிகளின் திருவருளுக்குரியவராய் அவருக்கு அணுக்கத் தொண்டராக இருக்கும் பேறுபெற்றனர். அங்கு தவத்திரு. கந்தசாமி அடிகளிடம் சமய இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார்; கவிபாடுவதிலும் வல்லவரானார்.

## அருளாட்சி ஏற்பு

அடிகளார் அவர்கள் தமிழ்க் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபொழுதே பேரூர் சாந்தலிங்கப் பெருமானின் திருமடத் தலைவராக விளங்கிய தவத்திரு. ஆறுமுக அடிகள் பேரூரடிகளைத் தம் திருமடத்தில் தமக்கு அடுத்த பட்டத்துக்குரியவராக ஆக்கித் தருமாறு தவத்திரு. இராமனந்த அடிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். பேரூர் திருமடத்திற்குக் கௌமார மடத்தின் தொடர்புடையவரும் தவத்திரு. இராமனந்த அடிகளின் திருவருளுக்குரியவருமே தலைவராக வருவது வழக்கமாக அமைந்திருந்தது. அவ்வழக்கப்படி தவத்திரு. இராமனந்த அடிகளின் அருளாணையினால் பேரூரடிகளார் சாந்தலிங்கத் திருமடத்தின் இளவரசு பட்டத்தினை 1950ஆம் ஆண்டு (விரோதி - மாசி 20) ஏற்றுக்கொண்டார்கள். அப்பொழுது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பதினெட்டாம் பட்டம் திருப்பெருந்திரு சிவஞானபாலய அடிகளிடம் பேரூரடிகளார் வீரசைவ நெறியில் அங்கலிங்கம் ஏற்றுக்கொண்டார்கள்.

## தமிழ்த் தொடர்பு

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இளமை முதலே தமிழில் பெரும் பற்றுக்கொண்டவர்; மயிலம் மடத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் தமிழ்க் கல்லூரியில் அக்கால வித்துவான் பட்டத்தையும் பெற்றவர்; நல்ல தமிழ்ப்புலமையும் வாய்ந்தவர். இலக்கண, இலக்கியத்தில் நல்ல புலமை வாய்ந்த அவர் தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக என்றே இப்போது மடத்தின் சார்பில் நடைபெற்று வரும் தமிழ்க்கல்லூரியின் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து வருகின்றனர். ஆண்டுதோறும் பல நல்ல மாணவர்களை உருவாக்கித் தமிழுலகிற்குத் தந்து வருகின்றார். தமிழறிஞர்களிடையில் அடிகளார்க்கு தனித்ததொரு இடமும் அன்பும் மதிப்பும் உண்டு. கல்லூரியினைத் தொடர்ந்து 1960இல் உயர்நிலைப் பள்ளி யினையும், 1977இல் மழலையர் பள்ளியையும் தொடங்கினார்கள். தமது கல்வி நிலையங்களில் பயிலும் மாணக்கர்கள் ஏட்டுப் படிப்புடன் அமைந்துவிடாமல் சமயப்பயிற்சி, வழிபாட்டு நெறியில் ஆர்வம், உடலுழைப்பில் ஊக்கம் ஆகியன உடையவர்களாக வளர வேண்டும் என்பது அடிகளார் அவர்களின் கொள்கை.

## சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில்

சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயிலுக்கு 1960ஆம் ஆண்டு விமானம் புதிதாக அமைக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு இராசகோபுரம் அமைக்கப்பெற்றது. சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய சதகத்தால் பாடித் துதித்த தில்லைப்பிரானைத் திருமட


ஆத்மஜோதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகத்தில் எழுத்தருளுவிக்கும் நோக்குடன் நடராசப் பெருமான் திருக்கோயில் கட்டிட முகப்பும் மாற்றி அமைக்கப்பட்டது. 1986இல் திருக்கயிலாய நினைவு வளைவு அமைக்கப்பட்டது.

அருள்மிகு சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் நாட்டு மக்களிடையே பரவ வேண்டும் என்னும் நோக்குடன் பதிப்புகள் வெளியிட்டுள்ளார்கள். சமயத்துறையில் தமிழ்நெறியே இடம்பெற வேண்டும் என்ற நோக்கத்தினால் திருக்கோயில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழால் சைவத்திருமுறைகளைக் கொண்டே நடத்துதல் வேண்டும் என்று தொடக்கக் காலம் முதல் அருட்பணிகள் ஆற்றிவருகின்றார்கள்.

### தமிழ்த்திருக்குட நீராட்டுப் பெருவிழா

தமிழ்மக்கள் தம் தாய் மொழியோடு இணைந்து இறைவனை வழிபடவும் அவன் உறை திருக்கோயில்கள் பொலிவு பெறவும் அடிகளார் அளித்த கொடை “தெய்வ ஒண்தீந்தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா”. திருக்குடநீராட்டு, வாழ்வியல் சடங்குகளான புதுமனைப் புகுவிழா, திருமணம், மணிவிழா, நீத்தார்கடன் ஆகிய அனைத்திற்கும் எளிய தமிழில் இனிய தமிழில் சடங்கு முறைகளை ஆக்கிக் கொடுத்துள்ளார்கள். திருநெறியத் தமிழ்முறைப்படி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட திருக் கோயில்களுக்குத் திருக்குடநீராட்டுப் பெருவிழாவைத் தலைமை தாங்கி நடத்தி வைத்துள்ளனர்.

### சமயப் பண்பாட்டுப் பயிற்சி

இளையோர்களும், மாணவர்களும் சமய நிலையில் ஒன்றிணைந்து செயற்பட ‘சமயப்பண்பாட்டுப் பயிற்சியினை’ ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் கிராமப் பூசாரிகள் பக்குவம் பெற்று வழிபாடியற்ற தமிழ் முறைப்படியான புத்தகம் ஒன்றினை அடிகளார் உருவாக்கியுள்ளார். இதனைச் செயற்படுத்த தமிழக அரசு ஆணையும் பிறப்பித்துள்ளது. மேலும் எல்லாத் தெய்வங்களையும் போற்றி வழிபடுவதற்கேற்ற பேராயிரம் பரவுதல் (சகஸ்ரநாமம்), நூறாயிரம் பரவுதல், இலட்சார்ச்சனை (நூறு நூறாயிரம்), கோடி அர்ச்சனை, நூற்றிஎட்டு அருச்சனை போன்ற தெய்வத்திருப்பெயர் வரிசை முறைகள் திருமுறைகளிலிருந்தும் ஆழ்வார் திருப்பாடல்களிலிருந்தும் அடிகளாரால் தொகுக்கப் பெற்றுள்ளன. இவை தமிழக அரசின் இந்து சமய அறநிலையை ஆட்சித்துறை





சார்பாக புத்தக வெளியீடாகவும் வந்துள்ளன.

### அயல்நாடுகளில் அடிகளார்

உலகநாடுகளில் ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய பல்வேறு நாடுகளில் தமிழறிஞாகள் வாழ்ந்து வருகின்றனர். அங்கு சமயத்திருக்கோயில்களையும் அமைத்து வழிபாடாற்றுகின்றனர். அங்குவாழும் அன்பர்கள் அடிகளாரை அழைத்து நமது சமய உண்மைகளையும், வழிபாட்டுச் செந்நெறிகளையும் உணர்ந்து கொள்கின்றனர்.

1998ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற உலக சைவமாநாட்டிற்குத் தலைமைதாங்கி நடத்தினர். இரண்டாவது உலக சைவமாநாடும் அடிகளார் தலைமையிலேயே நடைபெற்றது. இந்துத்துறவியர் இயக்கத்திற்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். கும்பமேளாவில் நடைபெற்ற உலக இந்துப் பேரவையின் மாநாட்டில் தமிழகத்தின் முதன்மைப் பங்கேற் பாளராகக் கலந்து கொண்டுள்ளார்.

### சமுதாயப் பணி

சிறைவாழ் மக்களுக்குத் தாமே சென்று அன்பும், பரிவும் காட்டி அவர்களுக்குச் சன்மார்க்க நெறியினைப் புகட்டுதல், தம்மைச் சார்ந்த அடியவர், புலவர், அன்பர் வழி இப்பணியினைச் செய்தல், அரசு மருத்துவமனைக்குச் சென்று நோய்வாய்ப்பட்டோருக்கு ஆறுதல் கூறித் திருநீறு அளித்து வருதல் போன்ற பணிகளில் ஈடுபாடு கொண்டவர்.

பெருங்கோயில், சிறுகோயில் என்ற கருத்து வேறுபாடு இல்லாது தாமே சென்று முறைப்படி திருப்பணிகளைச் செய்வார். ஏழை, எளியவர், பணக்காரர் என்ற வேறுபாடு கருதாது அவர்களது அன்பு வேண்டுகோளை ஏற்றுப் பேணுவார். சிறுகோயில்களில் பாமர மக்களின் அறியாமையால் நிகழும் பொருந்தா வழிபாடுகளை நீக்கியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்க பணி தெய்வங்களுக்குப் (ஆடு, கோழி) பலியிடுதலை நீக்கியதாகும்.

சமய, சமுதாய, பண்பாட்டுத் துறைகளில் சிக்கல்கள், சீர்கேடுகள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள் ஏற்படும்பொழுது பொதுமக்களுக்கு ஆலோசனை கூறி அவர்களை நன்னெறிப் படுத்துவார். நேரில் செல்ல இயலாதபொழுது எழுத்து வாயிலாக அறவுரைகள் வழங்குவார். தாய்ச் சமயத்திற்குத் திரும்புவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்று, அவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குவதில் உறுதியாக நின்று உதவி செய்வார். மீனாட்சிபுரம் கலவரத்தில் குன்றக்குடி அடிகளாருடன் மேற்கொண்ட பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

இப்பணிகள் அனைத்திற்கும் ஆணிவேராய், அடிநாதமாய் விளங்கினாலும் விளம்பரங்களை விரும்பாது வெண்கொற்றக் குடையாய் விளங்காமல், வெயிலுக்கேற்ற குடையாய் விளங்கும் பேரூரடிகளார், இந்நூற்றாண்டின் வரலாற்றுப்புகழ் பெறுகிறார். இவ்வாறு சமயநெறி, தமிழ்நெறி, தொண்டு நெறி ஆகிய இவற்றினைத் தம் அருட்கொள்கையாகக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டின் அப்பராக, தமிழைத் துறக்காத தனிப்பெருந் துறவியாகப் பேரூரடிகள் விளங்குகிறார்.

திரு. கா. திருநாவுக்கரசு,
விரிவுரையாளர், தமிழ்த்துறை
த.சா.அ.க.அ. தமிழ்க்கல்லூரி, பேரூர்

நன்றி:
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் முத்துவிழா சிறப்பு மலர்
22.10.2005

**சைவ மாநாடு**

அவுத்திரேலியாவின் சிட்னி நகரத்தில் ஜனவரி 27, 28, 29 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள பத்தாவது உலகச் சைவ மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

**- ஆசிரியர்**





# ஒப்பிலாக் குருவே வாழி!

ஐயனே சாந்த லிங்க வடிகளே அகவை இந்நாள்
செய்யசீர் எண்ப தாமோ செங்கதிர் முதுமை என்றும்
எய்துமோ இணையிற் பேரூர் இறைவனின் அருளாற் சைவப்
பொய்யிலா நெறியைப் போற்றிப் புகழுடன் பொலிந்து வாழி!

செந்தமிழ் மொழியிற் சைவச் சடங்குகள் சிறக்கச் செய்வாய்
மந்திரம் அதிலும் உண்டென் றனைவரும் மதிக்கச் சொல்வாய்
அந்தமில் அறிவி னாலே வாதிக்கும் ஆற்ற லாலே.
விந்தைகொள் பரட்சி செய்யும் வித்துவான் விளங்கி வாழி.

நாவலர் பெருமான் போல நற்றமிழ் சைவம் தம்மை
ஆவியின் மேலாய்ப் பேணி யரும்பணி நாளு மாற்றி
பூவிரி பொழிலைப் போல விரண்டையும் பொலியச் செய்யுஞ்
சேவையில் நிற்கும் நின்னைத் தெய்வமென் போமே வாழி!

பதிபசு பாச மென்ன பக்குவம் என்றால் என்ன
விதியெனின் என்ன முன்னை வினைப்பயன் என்ன வென்றே
எதுபொரு ளேனும் மிக்க வெளிதினில் விளக்க வல்ல
மதிநல மலையே ஞானக் கயிலைமா முனியே வாழி!

புத்தியைத் தீட்டு தற்கும் புலன்களை அடக்கு தற்கும்
சித்திகள் பெறுவதற்கும் சிந்தனை சிறப்ப தற்கும்
பத்தியை வளர்ப்ப தற்கும் பக்குவம் அடைவ தற்கும்
உத்திகள் ஊன்றிச் சொல்லும் ஒப்பிலாக் குருவே வாழி!

பேருல கத்துச் சைவப் பேரவை பணிகள் செய்ய
ஊருல கெங்கும் ஓடி உறுதுணை யாக நிற்பாய்
நேர்நிக ரற்ற சைவ நீதியை உலகில் நாட்ட
யாருனைப் போல வுள்ளார் அருந்தவ வடிகாள் வாழி!

வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் விளங்கப் பேரூர்
ஆதீனம் அமைத்து வையம் அமைதியுற் றோங்கும் வாழ்வுக்(கு)
ஆதார மான வான்ற தொண்டுகள் ஆற்றும் நின்றன்
பாதார விந்தம் போற்றிப் பணிந்தனம் பரந்து வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தில் விளைந்து முற்றித் தவத்தினிற் கனிந்த சான்றோய்
வையமும் நின்னைப் போலப் பொய்யிலா வாழ்க்கை வாழ்ந்தே
உய்யுற வேண்டு மாயின் ஓய்விலாக் கங்கை போல
செய்துநீ இன்னுஞ் சேவை திரிதர வேண்டும் வாழி!

நாவிலே வல்ல நாக ரிகத்தமிழ் நதியே வாழி
பாவிலும் திறமை மிக்கப் பழந்தமிழ் நிதியே வாழி
சேவையாற் பயன்வி ளைக்குஞ் சித்திரத் தேரே வாழி
கோவையூர் பெற்ற கோவே சிவனருட் கொடையே வாழி!

வாழிய பேருர் மேவும் மதியுறு சடையார் வாழி
வாழிய பேரூ ராதீ னந்தழைத் தோங்கி வாழி
வாழிய முதல்வர் சாந்த லிங்கனார் நீடு வாழி
வாழிய சைவ நீதி வையகம் எல்லாம் வாழி!

- வி. கந்தவனம்.



அடிகளாருடன் ஆத்மஜோதி ஆசிரியரும் துணைவியார் தவமணியும்





# பாபாவுக்கு வயது 80



நவம்பர் 23 சத்யசாயி பாபாவின் அவதாரநாள். அவருக்கு அகவை எண்பது.

புட்டபத்தியிலும் உலகெங்கணும் உள்ள சாயி நிலையங்களிலும் அவரது முத்துவிழா வழிபாடுகளுடன் கொண்டாடப்பட்டது. பல இடங்களிற் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சாயி வழிபாடு இந்துக்கள் மத்தியில் மட்டுமல்லாது பிற சமயத்தவர்களிடமும் பரவியுள்ளது. சாயி சமயம் என்ற ஒருநெறி இந்து சமயத்துக்குள்ளேயே வளர்ந்து வருகின்றது. சாயி பக்தர்கள் அதனை ஒரு தனித்துவ வழி பாடாகவே பார்க்கிறார்கள். அவர்கள் அப்படிப் பார்ப்பதற்கும் காரணங்கள் உள்ளன. அவற்றை இப்படிப் பட்டியற்படுத்தலாம்.

1. சாயி சமயம் உலகிலுள்ள பிரதான சமயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றது.
2. ஆகமவழிபாட்டு முறையிலும் கூட்டுவழிபாட்டுக்கே முக்கியத்துவம் தருகிறது.
3. உண்மையிற் பெரும்பாலான சாயி பக்தர்கள் ஆகம முறையில் நடத்தப்பெறும் கோயில்களுக்குப் போவதில்லை.
4. ஒற்றுமை பேணும் நாகரிகம் ஒன்றை சாயி பக்தர்கள் தோற்றுவித்து அதன்படி ஒழுகியும் வருகிறார்கள்.

அந்த ஒழுக்கங்களாவன:
- அன்பாகப் பழகுதல்
- நேர்மையாகப் பேசுதல்
- உதவி செய்ய முன்வருதல்
- சாத்திர சம்பிரதாயங்களிலும் மனிதாபிமானம் பண்புடைமை, தொண்டு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல்
- வழிபாட்டைக் குறித்த நேரத்துக்குள் முடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்கேற்ற ஒரு சமயமாகச் சாயிசமயம் உருவாகி விட்டதென்றே சொல்லலாம். தோன்றா எழுவாயாக அது ஒரு தனிச் சமயமாகவே இயங்குகிறது. பௌத்தம், சீக்கியம் போன்ற நெறிகள் இந்து சமயத்திலிருந்து பிரிந்தவை. அவை வழியில் சாயி சமயமும் இந்து சமயத்திலிருந்து வேறாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை. அந்த அளவுக்குச் சத்யசாயிபாபாவில் கடவுளைக் காண்கின்றனர் அவரது பக்தர்கள். சத்யசாயி பாபாவின் போதனைகளும் காலத்துக்கு ஏற்றவையாகவும் நடைமுறைக்கு ஒத்துப்போகக்கூடியவையாகவும் உள்ளன.

பத்திமார்க்கத்தை எப்படிப் பரப்ப வேண்டும் என்று நன்கறிந்தவர் அவர்.

எனினும் அவரை எந்த அளவுக்கு அவரது அடியார்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது கேள்விக் குறியே.

பல சாயி நிலையங்களில் பதவிப் போட்டிகளும் பூசல்களும் நடைபெறுகின்றன. தொண்டும் வழிபாடும் பெயருக்கும் புகழுக்குமாகின்றன. பாபா தெலுங்குப் பாடல்களைத் தான் பாடவேண்டும் என்று எங்கணும் சொல்லவில்லை. கோயில்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் கூறவில்லை.


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**
**டாக்டர் அ. சண்முகவடிவேல்**
**Orthodontics Implants**
பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்
**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)
**416-266-5161**
**MAIN SQUARE DENTAL OFFICE**
**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
**416-690-0121**






## கருமத்தைச் செய், பலனில் பற்று வையாதே!

**சுவாமி கெங்காதரானந்தர்**

கருமபலனைத் துறப்பதால் வரும் பேரானந்தப் பேற்றுக்கு நம்மை ஆளாக்கித் தீர்ப்பதற்கு கரும ரகசியத்தைப் பற்றி அறிவது அவசியமாகும். கரும பலன் சாராமல் கருமம் செய்யும் அதிநுட்பமான கருமநியமங்களை தத்துவார்த்த ரீதியாக விரித்துக்கூறும் ஓர் அரிய நூல் பகவத்கீதை. பகவத் பிரசாதமாக கிடைத்த அந்த அபூர்வ நூலின் சாராம்சம் கருமம் செய் பலனில் பற்று வையாதே என்பது. கரும பலனைத் துறந்து சமசித்தனாய் இருப்பவர்களுடைய கடும் வினைகள் தீர்ந்து நித்திய சுகம் கிடைக்கும். இறப்பு பிறப்பொழிந்து இறை சம்பந்தமும் கிடைக்கும். சீவன் அடைய வேண்டிய இறுதிநிலையும் இதுதான்.

கீதா தருமங்கள் வாழ்க்கைத் தருமங்களைப் புறக்கணிப்பதில்லை. கருமத்தில் விரத்தி மனோபாவமில்லாமல் சுயதருமத்தை முறையாகச் செய்வதற்குரிய ஊக்கம் அளிக்கின்றது. அங்ஙனம் சுயதருமத்தை முறைதவறாமல் செய்கின்றவர்களுக்கு நாளடைவில் சுயமாகவே ஞானம் சித்திக்குமென்பது கீதையின் கருத்து.

வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தெரியாமல் மதிமயங்கி விரக்தியடைந்திருப்பவர்களுக்கு சுயநம்பிக்கையும் உற்சாகவும் தாராளமாகக் கீதை அள்ளி வழங்குகின்றது. கருமத்தைத் துறப்பதும் பலன் கருதாமல் கருமமாற்றுவதும் எவராலும் செய்ய முடியாத காரியம். இவ்விடயத்தில் யோகியும் போகியும் ஒரே சார்புடையவர்கள். ஊண், உறக்கம், தொழில், வழிபாடு, தவயோகமெல்லாம் பலன் கருதிச் செய்பவை. பயன்கருதாமல் கருமமாற்ற முடியாதென்றிருக்கையில் கரும பலனைத் துறப்பதென்பதின் அர்த்தமென்ன?

பயன் எதுவாயினும் சரி அதில் விருப்பு வெறுப்பில்லாமல் சமசித்தனாய் இருப்பதென்பது அதன் உட்பொருள். இதை நடைமுறைப்படுத்துவது மிகக் கடினமான காரியமானாலும் சிரமமான பயிற்சி, வைராக்கியம், உறுதியான மனம், திருவருள் துணைகொண்டும் சாதிக்கலாமென்று கீதை வலியுறுத்திக் கூறுகிறது.

உண்மைப்பொருளாகிய பகவான் கீதோபதேசம் மூலமாக நமக்கு உறுதிமொழி அளிக்கும்பொழுது நாம் அதில் நம்பிக்கை இல்லாமலிருப்பதற்குரிய காரணங்களில்லை. வினைப்பயனைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலின் பலாபலனைப் பற்றி மனம் உருவாக்கிக் கொண்டிருக்கும். "பிரதீகரணம்" அதிக துன்பத்தை விளைவிக்கக்கூடியது. கரும பலனைப்பற்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, எண்ணிக்கொண்டிருக்கும் மனோவாசனை "பிரதீகரணம்" எனப்படும். மனம் உருவாக்கிக் கொண்டிருக்கும் பிரதீகரண அலைகள் கிரியா சக்தியைப் பலவீனப்படுத்திக் காரியத்தடையும் மனக்குழப்பத்தையும் விளைவிக்கின்றன. மனதின் பிரதீகரண சக்தியைக் குறைத்து கா்மபலனைத் துறப்பதற்குரிய வழி என்ன?

"ப்ரசாதயால் சா்வதுக்கானாம் ஹானி." கரும பலன் சுகமோ துக்கமோ அது எதுவானாலும் சரி கிடைப்பதைத் திருவருள் பிரசாதமாய் ஏற்றுக்கொள்ளப் பழகினால் துயரம் தீரும். ஆலய வழிபாட்டிற்குப் பின் பிரசாதம் கிடைக்கிறது. சில சமயம் சா்க்கரை அமுது, பஞ்சாமிருதம் போன்ற சுவைமிக்க இனிய பிரசாதம் கிடைக்கும். வேறு சில வேளையில் கிடைப்பது நீர், குழை, மலா் போன்றவையாயிருக்கும். அது எதுவாறாயினும்சரி கிடைக்கும் பொருளின் குறை நிறை தராதரமேதுமே நினைக்காமல் நிறைமனதுடன் ஈஸ்வர பிரசாதமென்ற மனோபாவனையுடன் அதை ஏற்றுக்கொள்கிறோம். அதே மனோபாவனையுடன் தினசரி செய்யும் கருமபலன் எதுவாயினும் சரி வருவதெல்லாம் திருவருள் பிரசாதம் என்ற மனசங்கல்பத்துடன் ஏற்கப்பழகினால் வினைப்பயன் சாராத எல்லையில்லா இன்பமும் ஆழ்ந்த உள் அமைதியும் நித்திய அனுபவமாயிருக்கும். இறுதியில் முக்திநிலையைத் தருகிற ஞானம் இயல்பாகவே உதிக்கும்.

மனிதா் தமது சுயவிருப்பு வெறுப்புக்களைச் சாதிப்பதற்காக எத்தனையோ கருமங்களை வருந்திச் செய்கின்றனா். அதனால் வரும் கடும் துன்பங்களைப் பொறுக்கவும் ஏற்கவும் பழகிக் கொள்கின்றனா். மேலும் பிறவித்துன்பங்களைப் பெருக்கும் இத்தகைய செயலைச் செய்கின்ற மனிதன் முன்வினையைத் தீா்த்துப் பின்வினை சாராமல் அல்லலொழிந்து நித்திய சுகமும், சாந்தியும் தரும் இந்த பயிற்சியைச் செய்து கடைத்தேறினால் என்ன?

மனித சாீரத்தில் நிறைந்திருக்கும் சீவன் மேன்மையானது. மரணத்திற்குப் பின் சீவனுக்கு மீண்டும் மனித சாீரம் கிடைக்குமோ என்பது சந்தேகம். சம்சார சமுத்திரத்தைக் கடப்பதற்குரிய மனித சாீரமென்ற பொருத்தமான தோணியும், குருவென்ற சுக்கானும், இறை அருள் என்ற சாதகமான காற்றும் கிடைத்தும் கரையேற முயற்சிக்காத மனித சென்மம் தற்கொலைக்கு ஒப்பானது.





# திவ்வியம் பழுத்த சைவமும் பவ்வியம் செழித்த நாவலரும்

பேரறிஞா் முருகவே பரமநாதன்

சமயம் வாழ்வின் முக்கியமான அங்கமாய் இருந்த நிலை நெகிழ்ந்து, நாம் சமயத்தை ஒரு பொருட்டாக எண்ணாத நிலைக்கு நம்மை நாமே தாழ்த்திக் கொண்டோம். வெற்றார வாரங்களிலும், ஆடம்பரங்களிலும் மூழ்கிச் சமயமணத்தைக் கழுவித்தள்ளி, போலிச் சமயிகளாய் வாழ்கின்றோம். எம் நிலையை உள்ளாா்த்தமாக உணரத் தவறியும் விடுகிறோம். இந்நிலை தேங்கினால் எம் சமய நிலை என்னாகும். நம் உயரிய சமயம், சமய நாட்டம், பண்பாட்டியல், அறப்பாங்கு, செவ்வியும் சிறப்பும் நிறைந்த மனித விழுமியம் சீா்குலையும்; வாழ்க்கைப் பயணம் தடம்புரளும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைவிட, மோசமான சூழ்நிலையை இம்மிலேனியம் எதிா்கொள்வது ஆரோக்கியமானதாய்த் தெரியவில்லை. பீடிப்புகைக்கும் சாம்பிராணிப் புகைக்கும் பேதம் தெரியவில்லை எனப் பாடிய கண்ணதாசனின் கருத்தைச் சைவப் பெருங்குடி மக்கள் சிந்திக்க வேண்டும். சம்மதம், சமரசம் பேசுவதின் அா்த்தம் தெரியாமல் வாழ்கிறாா்கள் நம் சமூகத்தினா். இந்து மதம் எது, சைவசமயம் எது என்று தெரியாத, புரியாத நிலைக்கு நாம் பின்தள்ளப்படுகிறோம். கிறீத்தவா்கள் இந்துமதத்தில் இருக்கும் பெலவீனமே அவா்களை மதம் மாறச்செய்கிறது எனக் கூறுகிறாா்கள். விவேகானந்தா், மனப்பெலவீனம் உள்ளவா்களை மனப்பெலமுள்ளவா்கள் மாற்றிவிடுகிறாா்களெனச் சொன்னாா். பல மதவாதிகள், பல சங்கங்கள், சபைகள், தாபனங்கள், புதிய சமயநோக்காளா் நம்முள் நுழைந்து (ஊடுருவி) செல்வாக்குப் பெறுகின்றனா். புதிய ஒவ்வாத தெய்வவழிபாடு திட்டமிட்டுப் புகுத்தப்படுகிறது. இதைச் சைவ சித்தாந்திகள் ததாஸ் சொல்லி ஏற்றும் கொள்வா். காலத்துக்கேற்ற மாற்றம் வேண்டுமென்போரும் சைவத்தை நலிவுபெறச் செய்கிறாா்கள். அன்பே சிவமென்பதை வம்பே சிவம் என்று எழுதிச் சைவநெறியைக் கொச்சைப்படுத்தவும் செய்கிறாா்கள். ஏதோ வந்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் எனப் பாரதி பாடியதை சிந்திக்க வேண்டிய காலமிது.

சமகாலக் கண்ணோட்டத்தில் இன்றைய சைவத்தின் நிலையையும் நாவலா் யுகத்தின் நம்நாட்டுச் சமய நிலையையும் ஒப்பிட்டுப் பாா்ப்பின் உண்மையான நிலைப்பாடு புலப்படும். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாடுகளில் வதியும் சைவசமயிகள் மதமாற்றம் செய்யப் படுகிறார்கள். மடிநிரப்புவர்களால் ஏமாற்றம் அடைகிறார்கள். அன்று ஒரு நாவலர் சைவத்தையும், தமிழையும், தமிழ்ச் சமூகத்தையும் காக்க வீறு கொண்டெழுந்தார். தன் முழு ஆளுமை, முயற்சி நேரம் என்பவற்றை ஒருமுகமாக்கி ஒரு இரட்சகராகத் தொழிற்பட்டார். அவரின் சேவையால் நாம் சைவர்களாய் வாழ்கிறோம். அன்றைய அறிவு சீவிகள், அந்தணர்கள் "சற்குருநாத சுவாமிகள்' எனப் போற்றினார்கள் நாவலரை.

சைவம் சிவசம்பந்தமானது, சைவசமயிகள் சிவசம்பந்தம் உடையவர்கள். எனவே சிவனையே முழுமுதற் பொருளாய் வழிபடுபவர்கள் சைவசமயிகள். இதற்கான சின்னங்கள், நடைமுறைகள் ஒழுகலாறுகள், வழிபாடுகள், தத்துவங்கள், சாத்திர தோத்திரங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற அனுட்டானங்கள் காலந்தோறும் நிதானமாய் வகுக்கப்பட்டு எழுதப்பட்டும் உள்ளன. இவற்றைப் புதுக்கியும், திருத்தியும், ஒவ்வாததென மாற்றியும் நடைமுறைப்படுத்தப் பலர் முயல்கிறார்கள். நாம் இவற்றைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

சிவனெனு மோசையும் சைவம் எனும் பாசையும்

சிவம் செம்மையென்ற அடியில் இருந்து பிறந்தது. செம்மை நேர்மை, சிறப்பு, மங்கலம், சுகம் என்ற பண்புகளையும், செந்நிறத்தையும் குறிப்பதுதான் சிவம் என்ற பிரயோகம். கவலையில்லாதவனைச் சிவலை என்பர். சிவலை - சிவன். செந்நிறத்தன், வெண்ணீற்றன் அவன் - அவனே சிவன். அதைச் செம்பொருள் என்றார் வள்ளுவனார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னஞ்
செம்பொருள் காண்பதறிவு.

- திருக்குறள் 358

"எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாதலால் வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையாற் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையாற் தூயதாய்த், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள். விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்றார்





பரிமேலழகர். முனைவன், வாலறிவன் என்ற வழக்காறும் சிவனைப்பற்றி எழுந்தனவே.

சிவம் சார்ந்த சைவநெறியிலே வாழ்பவர்கள்தாம் சைவசமயிகள். சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் போன்ற சான்றோர்கள் எது சைவம், எது இந்து சமயம் என்பதை விளக்கி ஆங்கிலத்திலேயே நூல்கள் தந்துள்ளனர். ஆங்கில மூலம் படித்த நம் ஊர்மாணவர்கள். இந்துசிம், சைவாசிம் என்ற இரு நூல்களைப் படித்துப் பரீட்சை எழுதியதை நாம் மறந்து விடலாகாது.

இறைவனையே சைவனாகக் காட்டும் சைவத்திருமுறைகள்.

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்
செழுமலர் புனலொடு தூபந்
தாருறு கொன்றை தம்முடி வைத்த
**சைவனார்** தங்கிட மெங்கும்
ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி
யொலி புனல் கொளவுடன் மிதந்த
காருறு செம்மை நன்மையால் மிக்க
கழுமல வளநகரென லாமே.

- திருமுறை 3:118. 3

**சைவத்தசெவ்** வுருவன்திரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையால் அரண்மூன்றும்எரி செய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன் திருச்சுழியல்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்த்தல் எளிதன்றே.

- திருமுறை 3:82.7

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் **சைவனுக்கென்** புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

- திருமுறை 8:40.9, திருவாசகம் 565

கிழியீடு நிதிப்பொதி, பொன்முடிப்பு, பொற்கிழி.
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயாறு அதனில் **சைவன்** ஆகியும்

மேலது 2: வரி 84, 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா போற்றி அணுவே போற்றி
**சைவா** போற்றி தலைவா போற்றி.
- மேலது 4 வரி 112.113

அனலமே! புனலே! அனிலமே! புவனி
அம்பரா! அம்பரத்(து) அளிக்கும்
கனகமே! வெள்ளிக்குன்றமே! என்றன்
களைகணே! களைகண் மற்றில்லாத்
தனியனேன் உள்ளம் கோயில்கொண் டருளும்
**சைவனே** சாட்டியக் குடியார்க்கு
இனியதீங் கனியாய் ஒழிவற நிறைந்(து)ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே
- திருமுறை 9: 15.6 (திருவிசைப்பா)

அனலம் - தீ, புனல் - நீர், அனிலம் - காற்று, புவனி - பூமி அம்பரம் - விண், களைகண் - பற்றுக்கோடு, கொழுகொம்பு ஏழிருக்கை - சாட்டியக்குடியில் அமைந்த ஆலயம்.
சைவன் - சிவம் (மங்கலம்) சைவன் - சிவபிரானைக் குறிக்கும்போது சிவம் என்னும் சொல் பண்பினை உணர்த்தும். உரை: புலவர் பி.ரா. நடராஜன்.

இவ்வண்ணம் சிவனும் சைவனும் ஒன்றாகப் பேசப்படுவது போலச் சைவமும் சிவமும் வேறுபடாதனவே. இதைவிடுத்து இன்று பரவலாக இந்துமதம் என்று பேசப்படும் பிரயோகம் சைவமாகாது என்பதைக் கான்முனையில் இருந்து முதியோர்வரை தெரிந்து கொள்ளல் மிகப் பிரதானமானது. ஆக இச்சமயம் பற்றிய விளக்கங்களைத் தாயுமானவர், திருமூலர் வாக்கில் இருந்தும் காணலாம். "சிவமே சைவம், சைவமே சிவம்".

தெய்வம் சிவமே சிவனருள்சமயம்
சைவம் சிவத்தொடு சம்பந்தம் என்றார் - சிற்றம்பல நாடிகள்.

வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயம் சாரும்
ஊழ் பெறல் அரிது, சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே.
- சிவஞானசித்தியார்





சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொ டொப் பார் இங்கு யாரும் இல்லை.
திருமந்திரம் 5

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவஞ் சிவானந்தம் சாயுச்சியமே
- திருமந்திரம் 1512

சிவத்தைப் பேணின் தவத்திற்கழகு.
- கொன்றைவேந்தன் 28

எல்லாச்சமய நெறிகளையும், தன்னகத்தே கொண்டு, அவைகளைப் பகுமுறையாகக் கொண்டு, அவைகளுடன் பிணங்காமல் இணங்கி, பாதரசத்தால் கரைந்து மறையும் மற்றைய லோகங்கள் போலன்றி, நின்று நிலைத்துத் தங்கும் பத்தரைமாற்றுத் தங்கம் போல் தன்னியல்பு என்றும் பொன்றாது, இமயம், நியமம் முதலிய அட்டாங்க யோக நெறிகளைக் காட்டி இன்பத்தையருள வல்லதும், மற்றைச்சமயங்கள் அனைத்தும் தமக்கும் பரிவாரமாக விளங்க சிட்சை, வியாகரணம், சோதிடம், சந்தஸ், கற்பம், நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் வணங்க மௌனம் என்ற மகுடத்தைச் சிரத்திற் தரித்து அரசுபுரிவது வைதிக சைவசமயம் என உணர்க.

"செப்பரிய சமயநெறி எல்லாம் தந்தம்
தெய்வமே தெய்வம் எனும் செயற்கையான்
அப்பரிசா ளரும் அஃதே பிடித்தால் இப்பால்
அடுத்து அந்நூல் களும்விரித்தே அனுமா னாதி
ஒப்பவிரித் துரைப்பர்! இங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலைஒன் றெனப் பார்ப்பது ஒவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி
யாதுசம யமும் வணங்கும் இயல்பதாகி

இயல்பென்றுந் திரியாமல் இமய மாதி
எண்குணமும் காட்டியன்பால் இன்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பட்சங் காட்டி
மயலறு மந்திரஞ் சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகிது, அந்தோ.

அந்தோ இது அதிசயம்இச் சமயம்போல் இன்று
அறிஞரெலாம் நடுஅறிய, அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம் வேறு இல்லை. இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக்காட்டத்
தக்க நெறி இங்நெறியே தான்சன் மார்க்கம்

என்று அனுபூதிமானாகிய தாயுமானப் பெருந்தகையார் அருளிச் செய்கின்றார். அட்டமாசித்தி கற்றாரும், இந்திராதிபோக நலம் பெற்றாரும் இச் சைவ சமயத்தையே தமக்குத் தாயகமாகக் கொண்டு உய்கிறார் என்று கூறும் அருமையையும் பெருமையையும் பெற்றது சைவ சமயம்.

(தொடரும்)

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்
நியூ தேவி உணவகம்
இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்
தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்
விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்
1877 Lawrence Ave. East, Scarborough, ON
(Lawrence & Pharmacy)
Tel: 416-288-0303





# Catechism on Saivaism

## 4. Virtues - (Good deeds) and Sins - (Bad deeds)

41. What is the vehicle on which Lord Siva appears for the sake of his devotees?
Lord Siva uses the bull called "Idabam" as his vehicle.

42. What are the other words in Tamil Hindu tradition that refer to "Bull"?
Tamil words such as "Nanthi" "Eruthu" "Earu" "Vidai" refer to the "Bull".

43. What does the "Bull" signify or represent?
The "Bull "represents "Dharama", which means, Virtues one should cherish in life.

44. What other words used to mean Dharma in Hindu tradition?
Words such as "Aram" "Punniyam" refer to Virtues or meritorious deeds.

45. What is the meaning of "Punniyam"?
"Punniyam" is the effect or the result of good or meritorious deeds.

46. Mention some of the examples of good deeds.
Worshiping God, respecting father, mother, teacher, priests, and other elders, compassion to living beings, kindness to those who are suffering, and showing gratitude.

47. What is the use of doing Good deeds?
Those who engage in good deeds will enjoy many benefits or merits.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. What should be avoided by the Saivaites - those who are followers of Saivaism?
All kinds of sins should be avoided by the Saivaites.

49. What are the Sins?
The Sins are, killing any living being, eating food obtained by killing any animals-(meat & fish), stealing, telling lies, feeling jealous, gambling, dishonesty, and harming others.

50. What will happen to those who commit sins?
They will experience sufferings.



வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பொங்கலன்று 14-01-06 இல் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தினால் வழங்கப்பட்ட நந்திக் கொடியினை டாக்டர் சண் சுந்தர் வெளியிட்டு வைத்தார். வெளியீட்டு விழாவில் பங்குபற்றிய பிரமுகர்கள் திரு. பொன். சுந்தரலிங்கம், சிவஸ்ரீ விஜயகுமாரக்குருக்கள், திரு. வதசுதேவ சர்மா, திரு. கதிர் துரைசிங்கம், திரு. ஜிம் கரியானிஸ், திரு. அன்ரனி செல்வராஜா ஆகியோரைப் படத்தில் காணலாம்.





# திருவாதவூரடிகள் புராணம்
# திருப்பெருந்துறைச்சருக்கம்

சைவப்புலவர், சைவசித்தாந்தபண்டிதர், வித்துவான்
**கு.வி.மகாலிங்கம்**

தொடர்கட்டுரை:

**43. ‘‘அத்தகு தொண்டர்க்கெல்லா..... உத்தமவடிவம் காட்டு...ருரைத்தல் செய்தார்”.**

பொ.ரை: ஞானதேசிகத் திருமேனியைத் தரிசிப்பித்தருளும் மெய்ப்பொருளாகிய சிவபெருமானார், அத்தகுதியையுடைய திருத்தொண்டர்களுக்கெல்லாம் முதல்வராகிய அப்பிரேர காசாரியரைப் பார்த்து, சாதுரியனே, தவத்தையுடைய இவ்வன்பன் பொருந்தும் பிறவித்துன்பத்தை நீக்கி நாம் அடிமை கொள்வது இத்தினமே. இதற்கு வேண்டும் காரியங்களை நீ ஒரு சிறிதும் கால நீட்டமின்றிப் பிரயத்தனஞ் செய்யக்கடவையென்று பணித்தருளினார்.
(செய்க என்னும் வியங்கோளீறு குறைந்து நின்றது. செய்யாயென்னும் முன்னிலை வினைமுற்று விகுதி குன்றிக் குரச்சாரியை பெற்று நிற்றதெனினு மமையும். ஞானாசாரியருக்கு ஆகமங்கள் விதித்த புருடாகிருதி முதலிய அனைத்து இலக்கணங்களும் ஒருங்கமைந்த வடிவம் என்பார், உத்தம வடிவமென்றுங் கூறினார். அத்திருத்தொண்டர்கள் வரலாறு முன்னர் கூறுதும்).

**44.‘‘ முன்னவன் புகன்றவாறு முயல்குவமென்றேயந்த மன்னிருந்தவத்தின் மிக்கார், வகைமலர்த் தொியவாலும் பொன்னிடையமுத்திமுத்தம் புனைந்தபல் பட்டினாலு மந்நெடுங்காவினூடங்கானபூங் கோயில் செய்தே.”**

பொ..ரை:- நிலைபெற்ற பெரிய தவத்தான் மேம்பட்ட அந்தப் பிரேரகாசாரியர், முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகிய பரமாசாரியர் பணித்தருளிய பிரகாரஞ் செய்யக் கடவோமென்று. நானாவிதமாகிய பூமாலைகளினாலும், பொன்னிழைகளை இடையிடையே செறித்து முத்துக்களைக் கொண்டு விளிம்பிழைத்த நானாவிதமாகிய பட்டு வஸ்திரங்களினாலும் அங்கே உயர்வாகிய அச்சோலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணே தீட்சைக் கியைந்த ஒரு பூஞ்சோலை பூங்கோயிலைச் செய்து.

(முயல்குவம் என்பது உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. அத்திருக்கூட்டத்துட் பிதுரேரகாசாரியராகிய முதன்மை பெறுதற்குரிய பூர்வசன்ம புண்ணிய விசேடத்தையுயைடவரென்பார். அந்த மன் இருந் தவத்தின் மிக்கார் என்றும் இவ்வரும் பெரும்பேற்றைப் பெறுதற்கிடமாகிய சோலை என்பார். அந்நெடுங்காவென்றும், தீட்சா மண்டபத்திலக்கணம் பொருந்தச் செய்த கோயிலென்பார் ஆனபூங்கோயிலென்றுங் கூறினார். பொன்னிடையழுத்தி என்பதற்குப் பொன்னைத் தகடுசெய் திடையிடையே அழுத்தியெனப் பொருள் கோடலுமொன்று.)

FASHION FLORIST INC.

பாஷன் பூக்களஞ்சியம்

பாபுவின் கைவண்ணத்தில்
பூக்கள் மாலையாகின்றன

தொடர்புகளுக்கு: பாபு



416-754-8282

4400 Sheppard Ave. East, Unit 5
Scarborough, ON.





ஓம் நமசிவாய

## திருமுறை அடியார்களின் திருத்தல யாத்திரை

இந்து சமயப் பேரவையின் திருக்கூட்டத்தைச் சேர்ந்த திருமுறை ஓதும் அடியார்கள் 15 பேர் இரண்டாவது முறையாக ஆத்மஜோதி உதவி ஆசிரியர் திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கத்தின் தலைமையில் இந்திய திருத்தல யாத்திரையை மேற்கொண்டார்கள். ஒக்ரோபர் 29ம்திகதி கனடாவில் இருந்து புறப்பட்டு டிசெம்பர் மாதம் 17ம் திகதி கனடா திரும்பினார்கள். மணிவாசகப் பெருமான் திருவாசகம் பாடி அருளிய முக்கிய தலங்களான திருப்பெருந்துறை சிதம்பரம், திருவண்ணாமலை, உத்தரகோசமங்கை ஆகிய தலங்களிலும், அவர் பிறந்த திருவாதவூரில் திருமறை நாதர் ஆலயத்திலும் திருவாசகம் முற்றோதியுள்ளனர். பல பாடல் பெற்ற தலங்களை தரிசித்த அடியார்கள், கந்தசட்டி, சூரன்போரை திருச்செந்தூரிலும் திருக்கார்த்திகை தீபத்தை திருவண்ணாமலையிலும் கண்டு களித்தார்கள்.



வடஇந்தியா யாத்திரையின்பொழுது காசியில் குமரகுருபரசுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட குமாரசாமி மடத்திலும் திருவாசகம் முற்றோதியது திருவருட் செயல் ஆகும். திருவாசகம் முற்றோதிய ஆலயங்களில் விசேட அபிசேக ஆராதனைகளும் செய்யப்பட்டன.

சந்தானகுரவர்களான மறைஞானசம்பந்தர், மெய்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் உமாபதி சிவாச்சாரியார் ஆகியோரின் சமாதிகளையும் ஆச்சிரமத்தையும் 63 சீடர்களுடன் சீவ சமாதி அடைந்த சிற்றம்பலநாடிகளின் சமாதி ஆலயத்தையும் சிவயோகி தட்சணாமூர்த்தி சுவாமிகளின் சமாதியையும் பாம்பன் சுவாமி முருகன் அருள்பெற்ற ஆலயத்தையும் வடஇந்தியாவில், சீரடிசாயிபாபாவின் சமாதியையும் ஆலயத்தையும், பேலூர் இராமகிருஷ்ணமடத்தில் சுவாமி இராமகிருஷ்ணர், விவேகானந்தர் சாரதாதேவி ஆகியோரின் சமாதி ஆலயங்களையும் தரிசித்துள்ளனர்.

சமயகுரவர்கள் நால்வரும் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆலயங்களான
சீர்காழி - திருஞானசம்பந்தர்
திருவதிகை வீரட்டானம் - திருநாவுக்கரசர்
திருவெண்ணெய்நல்லூர் - சுந்தரர்
திருப்பெருந்துறை - மாணிக்கவாசகர்
ஆகிய தலங்களை தரிசித்ததும் சொற்கோயிலாகிய திருமுறைகளை ஓதிய பலனே என்பதில் ஐயமில்லை.

கடந்த ஆறுவருடமாக திருமுறை முற்றோதிய பலன் தான் இந்த யாத்திரை அனுபவம் என்பது அடியார்களின் கருத்தாகும்.

**S & S Engravers**

வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைகேற்ப

**குறைந்த விலையில்**
**நிறைந்த தரத்தில்**




Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels, Tropbies, Medals & Ribbons

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**
**Fax: 416-609-0272**





# மதுரை ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள்

## திருமுருக கிருபானந்தவாரியார்

**கடந்த இதழ் தொடர்ச்சி:**

தந்தையார் குருநாதரிடம் விடைபெற்றுக்கொண்டு காங்கேயநல்லூர் சேர்ந்தார். சித்திரை மாதம் 14ம் திகதி கால்நட்டு கோபுர வேலையைத் தொடங்கினார். எங்கள் ஊருக்கு அண்மையில் உள்ள ஊர்களில் சென்று இரவில் பிரசங்கம் செய்வார். அதில் வரும் ஊதியத்தைக் கொணர்ந்து கூலியாட்களுக்குத் தருவார். சிறிது கடனும் வாங்குவார். 40 நாளில் ராசகோபுரம் கட்டிடவேலை முடிவுபெற்றது.

ஐப்பசி மாதம் பூச்சுவேலை, சுதைவேலை தொடங்கப் பெற்றது. ஐந்து நிலைக்கோபுரம். ஒருநாள் மாலை 3 மணிக்கு உச்சியில் கோபுரத்தின் மகரநாசி பூச்சு வேலை நடந்து கொண்டிருந்தது. சிற்பிகளுக்குச் சிற்றுண்டிதர என்தம்பி ஸ்ரீ கைலைவாசன் கோபுரத்தின்மீது சென்றான். எனது தமையனார் அவனைப் பார்த்து "நேரமாயிற்று இன்று அப்பா வேலம் என்ற ஊரில் விரிவுரை செய்யப் போகவேண்டும். நீ அப்பாவுடன் செல்லுக" என்றார்.

என் தம்பி திரும்புகின்றபோது உச்சியிலிருந்து தவறி விழுந்துவிட்டான். மிகவுயர்ந்த கோபுரத்துச்சியிலிருந்து உருண்டு நினைவின்றி நிலத்தில் வீழ்ந்தான். அங்கு சுண்ணாம்பு அரைக்கின்ற பணியாளர்கள் அவனையேந்திக்கொண்டு வீட்டில் சேர்த்தார்கள். இதைக் கண்ட ஊரவர் ஓ என்று கதறினார்கள். எனது தமக்கையார் மகன் கோதண்டபாணி சென்று மேல்மாடியில் சிறிது கண்ணயர்ந்துள்ள தந்தையாரிடம் "தாத்தா" மாமா கோபுரத்துச்சி யிலிருந்து விழுந்துவிட்டார்" என்று அழுது கொண்டே கூறினான்.

தந்தை பதறிக்கொண்டு கீழே இறங்கி வந்தார். நினைவின்றி... அசைவின்றி கிடந்த மைந்தனைக் கண்டார். உடனே அடியேனைப் பார்த்து "அன்று திருப்புகழ் சுவாமிகள் தந்த திருநீற்றை எடுத்து வா" என்றார். பீரோவில் இருந்த அந்தத் திருநீற்றுப்பையைக் கொணர்ந்து பிதாவிடம் தந்தேன். தந்தையார் வாங்கி தம்பியின் நெற்றியில் இட்டு சடாட்சர மந்திரத்தைக்கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பில் பூசினார். அவன் கண் விழித்தான். தந்தையார் "மகனே! எப்படியுள்ளது?" என்று கேட்டார். "அப்பா எனக்கு ஒன்றுமில்லை" என்றான்.

தந்தையார் "முருகா! நான் உன் வேலையாகப் போகின்றேன். நீ என் வேலையைப் பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். காட்பாடியில் ரயில் ஏறி வாலாஜா ரோட்டில் இறங்கி வேலம் என்ற ஊருக்குச் சென்றார். அன்று மாலை அவர் ஒன்றும் அருந்தவில்லை - புத்திர சோகத்தால் வாடியிருந்தார். "மகன் பிழைப்பானோ? பிழைக்க மாட்டானோ? முருகன் திருப்பணி செய்கின்ற எனக்கு இப்படி ஒரு சம்பவம் நிகழுமானால் முருகனுக்கு அல்லவா குறை நேரும்" என்று எண்ணி வருந்தினார்.

அன்று நிகழ இருந்த நிகழ்ச்சி இராமதாசர் சரிதை. தந்தை அதை மாற்றி அருணகிரியார் சரித்திரத்தைக் கூறினார். அருணகிரிநாதர் கோபுரத்திலிருந்து வீழ்ந்தார் என்று கூறும்போது தந்தையார் தன் மகனை நினைந்து அழுதார். அடுத்தநாள் காலை காங்கேயநல்லூர் வந்து மகனைப் பார்த்து அவன் எந்தவூறும் இன்றி இருப்பதை அறிந்து ஆறுதல் அடைந்தார்.

இவ்வாறு பின்னே வருவன முன்னே அறிந்து கூறி அருள் நீறும் தந்த திருப்புகழ் சுவாமிகளின் தவ வலிமையைக் கூற யாராலும் முடியாது.

## மூன்றாவது அதிசயம்

எங்கள் ஊரில் தந்தையார் இராஜகோபுரம் புதுக்கி, கும்பாபிடேகம் செய்யலானார். அந்தக் கும்பாபிடேகப் பத்திரிகையின் அடியில் சுவாமிகள் பேரைமட்டுமே பொறித்தார். சுவாமிகள் கும்பாபிடேகத்திற்கு எழுந்தருளினார். முன்னின்று கும்பாபிடேகத்தை நடத்தியருளினார்.

காங்கேயநல்லூரில் தங்கியிருந்தபோது ஊரவர் சுவாமிகளைப் பார்த்து, இந்தவூர் கிராம தேவதை செல்லியம்மை கோவிலுக்கு நீங்கள் வரவேண்டும் என்று அழைத்தார்கள்.





"சுவாமிகள் பின்னப்பட்டிருக்கின்ற அதனை நான் ஏன் பார்க்க வேண்டும்"? என்றார். ஊரவர் போய்ப் பார்த்தார்கள். அம்பிகையின் மூக்கில் துவரம்பருப்பு அளவு பின்னம் இருந்தது.

தினம் கோவிலுக்குப் போகின்றவர்கட்கே தெரியாத ஒன்றை கோயில் இருக்கும் திசையே தெரியாத சுவாமிகள் கூறினார். இத்தகைய அரிய ஆற்றல் படைத்தவர் சுவாமிகள்.

சுவாமிகட்கு ஆண்மகவு பிறந்தது. சுவாமிகள் எனது பிதாவுக்குக் கடிதம் எழுதினார். ஆண்மகவு பிறந்தது என்று எழுதவில்லை. "கிருபானந்தவாரிக்கு தம்பி பிறந்திருக்கின்றான்" என்று எழுதினார்.

மற்றொரு சமயம் தந்தையாருக்குக் கடிதம் எழுதினார். "உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள நிலங்களை நீங்கள் வாங்குவீர்கள். வீடு நிரம்ப நெல் குவிந்திருக்கும் அதை நான் வந்து பார்ப்பேன்" என்ற வசனங்கள் அதில் இருந்தன. இதை அவர் எழுதியபோது ஒரு உள்ளங்கை நிலமும் கிடையாது. நிலம் வாங்கக்கூடிய எண்ணமோ இயல்போ கிடையாது.

சுவாமிகள் திருவாக்கின்படி தந்தையார், வீட்டுக்கு அருகில் உள்ள நிலங்களை வாங்கினார்.

ஒரு சமயம் அருணகிரியார் ஆராதனை விழாவுக்கு சுவாமிகள் காங்கேயநல்லூருக்கு எழுந்தருளினார். தன் கழுத்தில் இருந்த தங்கக் கௌரி சங்கர் உருத்திராட்ச மாலையைக் கழற்றி அருணகிரியாருக்குச் சாத்தி விட்டார். அன்று அடியேனுக்கும் என் தமயனாருக்கும் திருக்கோயிலில் சடக்கர மந்திர உபதேசம் புரிந்தருளினார்.

அடியேன் சில தினங்கள் மட்டுமே திருப்புகழ் பாடங்கேட்டேன். "எல்லாம் உனக்கு வரும்" என்று கூறி ஆசீர்வதித்தார். அந்த மகாஞான முனிவர் திருவாக்கின்படி அடியேனுக்கு திருப்புகழில் சிறிது ஞானம் உண்டாயிற்று. சுவாமிகள் வளைகுளம் என்ற ஊரில் விரிவுரைக்குச் சென்றிருந்தார். அடியேனும் அடியேனுடைய தந்தையாரும் சென்றிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஊர் திருத்தணிக்கு கிழக்கே 4 கல் தொலைவில் உள்ளது. 10 ஊர்ச்சனங்கள் சுவாமிகளின் விரிவுரைகேட்கத் திரளாக குழுமியிருந்தனர். சுவாமிகட்கு உணவுக் கோளாறினால் மேடைமீது நின்றவுடன் வயிற்றுவலி வந்து பேசமுடியாமல் இறங்கிவிட்டார். பின்னர் அம்மேடை மீது எனது தந்தையார் ஏறிப் பேசத் தொடங்கினார். கோடையிடி போல் பேசும் பெருந்திறல் உடைய தந்தையார், என் குருநாதருடைய மேடை மீது எனக்கு பேச நா எழவில்லை என்று கூறி இறங்கிவிட்டார். சனங்களுக்கு பெரிய ஏமாற்றம்.

பிதா என்னையழைத்து "நீ பேசு" என்று பணித்தார். சிறியேன் "இளங்கன்று பயமறியாது" என்ற முதுமொழிப்படி ஏறி துணிச்சலாக திருப்புகழை மளமள என்று கூறி விரிவுரை செய்தேன். இதனை மறைவில் இருந்து சுவாமிகள் செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்தார். 2 மணிநேரம் பொறுத்து வந்து மேடைமீது ஏறி அழுதார்.

"மகாசனங்களே நானன்றித் திருப்புகழின் தத்துவார்த்தங்களை எனக்குப்பின் யார் பேசப்போகிறார்கள். இவை எவருக்குத் தான் சொந்தமாகுமோ என்று கவலை கொண்டிருந்தேன். இச்சிறுவன் மிக அழகாக பேசி என் உள்ளத்தை உருக்கி உவகையூட்டினான். இவன் என் வாரிசு. என் உயிர் இன்றே பிரிந்தாலும் குறையில்லை. இவனால் திருப்புகழ் மாட்சியுறும்" என்று கண்ணீர் சொரிந்து கொண்டே கூறினார்.

எங்கள் குருநாதராகிய மதுரை திருப்புகழ் சுவாமிகள் சீலமும் கோலமும் உடையவராய், ஞாலமெல்லாம் சுற்றி, வெண்கல மணிபோன்ற கணீர் என்ற குரலுடன் திருப்புகழை பாடி வியாக்கியானம் புரிவார். கந்தர் சஷ்டி விழாவைப் பெரும் பொருள் செலவழித்து அதி விமரிசையாக கொண்டாடுவார். தான் திருக்கோயில்களில் விழாக்களில் இரவு முழுவதும் கோஷ்டி செய்து அதன் மூலம் வரும் செம்பொற் காசுகளை சஷ்டி விழாவுக்குச் செலவழிப்பார்.

ஒருசமயம் திருச்செந்தூரில் அடியேன் சுவாமிகளுடன் இருந்தேன். தனிமையில் இனிமையாக என்னுடன் கந்தபுராணத்தில்





ஜயந்தன் கனவுகாண் படலத்தை சொல்லி கண்ணீர் விட்டு அழுதார். அப்போது அவர் கூறிய பாடல் இது.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலம் இடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழு தண்டு வில்லிசைந்த
ஆறிரண்டு கை அறுமுகங் கொண்டு வேள் அடைந்தான்.

காலம் முழுவதும் தனக்கென்று வாழாமல் திருப்புகழுக் காகவே வாழ்ந்தவர். மாணவர்களிடம் தளராத தயவு பூண்டவர். தனக்கென்று ஒன்றும் சேர்த்து வைத்துக்கொள்ளாமல் வெள்ளை யுடையுடுத்தி சந்நியாசியாக, சனகரைப் போல் இல்லற ஞானியாக வாழ்ந்தவர். இப்பெருமான் 1936ல் தாது வருடம் முருகன் திருவடி சேர்ந்தார்.

இத்தகு வித்தக ஞான மூர்த்தியால் 50 ஆண்டுகட்கு முன் மதுரையில் நிறுவப்பெற்றது திருப்புகழ் சபை. 25வது ஆண்டில் திரு. V. S. லோகநாதபிள்ளையவர்கள் வெள்ளிவிழா கொண்டாடினார்.

திருப்புகழ் சுவாமியின் புதல்வர் கணபதி என்பவர் அடக்கமும், அன்பும், அறிவும் பூண்டவர். சுவாமிகளின் மருமகர் திருப்புகழ் K. V. தியாகராஜ ஐயர் உத்தமமான பக்தசீலர்.

திருப்புகழ் சுவாமிகளின் புகழ் ஓங்குக. அவருடைய அருள்நெறி வளர்க. திருப்புகழ் சபை நீடூழி வாழ்க.

\- முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாத இடந்தனிலே போக வேண்டாம்

ஞானசுரபி நா. முத்தையா

**கடந்த இதழ் தொடர்ச்சி:**

உயிரற்ற ஒரு பிணத்தை ஒருவன் எப்படித்தழுவிப்புரட்டி என்ன செய்தாலும் அது அத்தனைக்கும் சும்மா கிடக்கும். அதைப் போலவே ஒரு விலைமகளும்தனக்குப் பணம் கொடுக்கும் ஒருவன் எப்படித்தழுவிக்கட்டிப்புரண்டு என்ன வேண்டுமானாலும் செய்யத் தன் உடலை அவனிடம் விட்டு விட்டு, ஒத்த எண்ணமோ உணர்ச்சியோ மனக்களிப்போ இல்லாதவளாக இருப்பாள். இருட்டறையிற் கிடக்கும் பிணத்தை பிணமென்றுஅறியாமல் தழுவுகின்றவன், அப்பிணம் உணர்ச்சியற்றிருப்பதை அறியமுடியாது. அதைப்போலவே ஒரு விலைமகளைக் காமத்தால் கண் இருண்டு புணருகின்ற ஒருவன் அவன் ஒத்த உணர்ச்சி இல்லாதவள் என்பதை அறிவதில்லை. ஆதலால் விலைமகளைத் தழுவுவது இருட்டறையிற் கிடக்கும் ஒரு பிணத்தை, அது பிணமா என்பதை இருட்டில் அறியாமல் தழுவுவதற்கே ஒப்பானது.

காம வசப்பட்ட துளசிதாசர் கொட்டுமழையில் மனைவியின் வீடு நோக்கிப் புறப்பட்டார். ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஆற்றில் பிரேதம் ஒன்று மிதந்து வந்தது. அதனை மரக்கட்டை என நினைத்து அதன் துணைகொண்டு ஆற்றைக் கடந்தார். வீட்டினுள்ளே புகமுடியவில்லை. மரத்தில் பாம்பைக் கயிறெனக் கருதி அதன் துணைகொண்டு மதிலேறிக் குதித்து மனைவியை அடைந்தார். காமவசப்பட்டவனுக்கு இவையெல்லாம் உண்மைநிலை தெரியாது.

அருட்செல்வமாகிய பேரின்பத்தை நாடுகின்றவர்கள், பொருட்செல்வத்தை மட்டும் கருதுகின்ற விலைமாதருடைய அற்பசுகத்தை நினைக்கவும் மாட்டார்கள். புத்திக்கூர்மையினாற் சிறந்த அறிவாளிகள் பொதுமக்கள் யாருக்கானாலும் விலைக்கு விற்க என்றே தம்மை அழகுசெய்து கொள்ளுகிறவர்களான விலைமாதரின் அற்ப சுகத்தில் அகப்பட்டுக் கொள்ள மாட்டார்கள். தம்முடைய தேக ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ள விரும்பு கின்றவர்கள் அழகினால் மயக்கும் விலைமாதருடைய தோள்களைத் தழுவமாட்டார்கள்.

அணங்கு என்பது பிடித்தால் விடாது என்று சொல்லப்படுகின்ற ஒருபெண்பேய். உடை நடை பாவனைகளில் பொய் மலிந்த





மாயக்காரிகளான விலைமாதர் மாயக்காரிகள் ஆவர். கொஞ்சமாவது பகுத்தறிவுள்ளவர்கள் ஒருமுறை இருமுறை பிழைவிட்டாலும் பின் விலகிவிடுவார்கள். ஆனால் பகுத்தறிவு என்பதே சிறிதும் இல்லாதவரைத்தான் விலைமாதரின் உறவுவிடாமல் பேய்போல் பிடித்துக்கொண்டிருக்கும்.

“இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திரு நீக்கப்பட்டார் தொடர்பு”

இரண்டு மனமுள்ள விலைமாதரும் கள்குடியும் சூதாட்டமும் செல்வமகளாகிய இலக்குமியால் விலக்கிவிடப்பட்டவர்களுடைய உறவுகள். இருமனம் என்பது பணத்துக்காக ஒத்துக்கொள்வது ஒருமனம் பணம் கொடுத்தவன் குரூபியாகவோ கிழவனாகவோ, நோயுள்ளவனாகவோ இருந்தால் அவனை அருவருப்பது இன்னொரு மனம். செல்வமகளின் அருளை இழந்து, வறுமையடைந்து துன்பப்படவேண்டியவர்களே விலைமாதரின் உறவையும், கட்குடியையும் சூதாட்டத்தையும் விரும்புவார்கள்.

கள்ளாசை கொண்டவர்கள் எக்காலத்தும் பிறரால் மதிக்கப்படமாட்டார்கள். உள்ள பெருமைகளையும் சிறுகச் சிறுக இழந்து விடுவார்கள். கள்ளைக் குடிக்க வேண்டாம். ஒழுக்கத்திலும் அறிவிலும் உயர்ந்த மேன்மக்களால் மதிக்கப்படுவதை வேண்டாதவர்கள் குடித்தால் குடிக்கட்டும். குடித்து வெறித்தவனை அவனைப் பெற்றெடுத்த தாய் பார்த்தாலும் வெறுப்பாள் என்றால், ஒழுக்கத்தையே பார்க்கும் நல்லவர்கள் பார்த்தால் எப்படியிருக்கும்? கள்ளைக் குடிப்பது என்ற விரும்பத்தகாத குற்றத்தை செய்கிறவர்களுக்கு நாணம் என்னும் நல்ல பெண் முகமெடுத்தும் பாராமல் முதுகைக் காட்டுவாள். பணத்தைக் கொடுத்து மெய்மறதியை வாங்கிக் கொள்வது என்பது, செய்யத்தக்கது எது? செய்யத் தகாதது எது? என்பதை அறியுந் தன்மை இல்லாமையேயாகும்.

மெய்ம் மறதி உற்றவர்கள் யாரானாலும் அவர்கள் உயிரற்ற பிணத்துக்கே சமானம். ஆகையினால் கள்ளுண்டு மெய்மறதி அடைகின்றவர்கள் கள்ளை உண்ணுந்தோறும் உயிரைப்போக்கி பிணமாக்கி விடுகின்ற விடத்தைச் சாப்பிடுகின்றவர்களே ஆகிறார்கள். கள்ளைக் குடித்து நிதானம் இழந்து கண் குழலுகின்ற இயல்புடைய குடியர்கள் தினந்தினம் இரகசியமாக வீட்டுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்துவிட்டு வீதியில் மானம் கெடுவார்கள்.

குடிகாரன் வெறியில் ஒரு குற்றமான வார்த்தையைச் சொல்விட்டுப் போதை தெளிந்தபின் "தெரியாமற் சொல்லிவிட்டேன்" என்று வருந்துவான். அப்படி மனதில் உள்ள பிறருக்குத் தெரியத்தகாத இரகசியங்களையும் போதையில் சொல்லி வெளியிட்டு விடக் கூடிய குடிப்பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். கள்ளுண்டு மயங்கி இருக்கும்போது அவனைச் சீர்திருத்த நியாயங்களைச் சொல்லுவது ஆழமான தண்ணீருக்குள் மூழ்கி மறைந்திருப்பவனை தீப்பந்தத்தைக் கொண்டு தேடுவதற்கு சமானம்.

கள்ளுண்ணும் பழக்கம் உள்ளவன் கள்ளுண்ணாதிருக்கிற சமயத்தில், கள்ளுண்டு போதையினால் மெய்ம்மறந்து தள்ளாடு கின்ற வேறொருவனைப் பார்க்கும் போதாவது கள்ளுண்பதனால் தனக்கும் அந்தத் தடுமாற்றந் தானோ என்பதைச் சிந்திக்க மாட்டானா? சிந்தித்தால் அவன் ஒரு வேளை திருந்தலாம்.

ஒருமுறை ஒரு கொடியவனிடம், ஒரு கத்தி, ஒரு பெண், ஒரு குழந்தை, ஒரு போத்தல் சாராயம் ஆகியன கொடுக்கப்பட்டன. இக்குழந்தையைக் கொலைசெய்து பெண்ணையும் கற்பழித்தால் இந்தச் சாராயப் போத்தல் உனக்கே. இத்தனையும் செய்து முடித்தால் உனக்கு ஆயிரம் ரூபா பரிசு தரப்படும் என்றும் கூறப்பட்டது.

ஒரு பெண்ணைக் கற்பழிக்கலாம். குழந்தையைக் கொல்ல முடியுமா? என்று நீண்ட நேரம் யோசித்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். முதலில் ஒரு போத்தல் சாராயத்தையும் போத்தலோடேயே குடித்துவிட்டான். போதை தலைக்கேறிய படியால் அறிவிழந்தான். செய்வதறியாத நிலையில் கத்தியை எடுத்தான். குழந்தையை ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கினான். இதைக் கண்டு பயந்து போயிருந்த பெண்ணை இலகுவில் கற்பழித்து தனது காம இச்சையையும் தீர்த்துக் கொண்டான். ஆயிரம் ரூபா பரிசும் கிடைத்தது. போதையும் அடங்கிவிட்டது. குழந்தையை எப்படிக் கொன்றேன் என்று சிந்தித்தான். அன்றே குடியை விட்டான்.

தாசிவீடும், குடிவகை இருக்குமிடமும் சூதாடும் இடமும் போகக்கூடாத இடங்கள் என்பதை இதுகாறும் கூறியவற்றிலிருந்து தெரிந்து கொள்ளுகின்றோம். ஆகவே போகாத இடந்தனிலே போகக்கூடாது.

- முற்றும்.





# ஒல்லாந்து யாத்திரை

## 2. ஒல்லாந்து

ஒல்லாந்துக்கு நான் இதுவரை சென்றதில்லை. இதுதான் முதற் பயணம். என்றாலும் அது எனக்குப் புதியதல்ல. ஒரு புவியியல் ஆசிரியன் என்ற வகையில் உலகத்து நாடுகள் பற்றிப் பலவிடயங்களை என்னாற் சொல்ல முடியும். இருப்பினும் நாடுகள் எங்கும் எப்பொழுதும் இருந்தபடியே இருப்பவையல்ல. மாற்றங்கள் கணமும் நடந்து கொண்டே யிருக்கின்றன. இயற்கையாக அமைந்த பௌதிக உறுப்புகள், காலநிலை போன்ற வற்றைத் தவிர, நாடுகளிலும் அபிவிருத்தி என்ற பெயரால் பலவிதமான மாற்றங்களை அரசுகள் தோற்றுவித்துக்கொண்டுதான் இருக்கின்றன. மக்களின் நடையுடை பாவனைகளும் காலத்துக்குக் காலம் மாறிய வண்ணம் இருப்பதைக் காணலாம்.

ஒல்லாந்தும் இதற்கு விதிவிலக்கல்ல. அதன் பெயரே இப்பொழுது நெதலாந்து ஆகிவிட்டது. நவீன நெதலாந்தைப் பற்றி - நான் பார்த்த நெதலாந்தைப் பற்றிச் சொல்லப் பின்னாலே இடங்கள் வரும். இப்போதைக்கு எனக்குத் தெரிந்தவற்றோடு பழையதும் புதியதுமான இரு நூல்களில் திரட்டிய சில தகவல்களையும் சேர்த்து வாசகர்களுக்கு நெதலாந்தை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

நெதலாந்து ஐரோப்பாவின் வடமேற்கில் அமைந்திருக்கும் வளமான ஒரு நாடு. இதன் வடக்கிலும் மேற்கிலும் வட கடலும் தெற்கில் பெல்சியமும் கிழக்கில் யேர்மனியும் எல்லைகளாகவுள்ளன.

நாடு அலைகடலை ஆளவல்ல இடச்சுக்காரரின் திறமையால் உருவாக்கப்பட்ட தொன்றாகவே விளங்குகிறது. உலகிலேயே கடல் மட்டத்துக்குக்கீழ் பெருமளவு நிலப் பரப்புகளைக் கொண்ட ஒரு நாடு உண்டென்றால் அது நெதலாந்துதான். மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் இரண்டு பகுதி கடல் மட்டத்துக்குக் கீழ் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் கடலுக்கும் மக்களுக்குமிடையே நடந்த போராட்டங்கள் சொல்லிமுடியா. 1421ல் இறையின் ஆற்று முகத்துவாரத்தின் பெரும் பகுதியைக் கடல் அடித்துக்கொண்டு போய்விட்டது. 17ஆம் நூற்றாண்டில் வடிகால் அமைப்புக்களாலும் அணைக்கட்டு முறையாலும் 1120 சதுர கிமீ நிலம் மீட்கப்பட்டது. இதுவும் கடலரிப்புக்குள்ளாகி 18ஆம் நூற்றாண்டளவில் 500 சதுர கிமீ அளவே எஞ்சியிருந்தது. அடுத்து, மக்களின் விடாமுயற்சியால் 1170 சதுர கிமீ நிலப் பரப்பு உருவாக்கப்பட்டது. அதிலும் கடல் தன் வாயை வைக்காமல் விடவில்லை.

இப்படியே கடலுக்கும் மக்களுக்குமிடையே நடந்த 'நானோ நீயோ' போராட்டத்தில் இடச்சு மக்கள் இன்று வெகுவாகவே வெற்றி பெற்றுள்ளனர். விஞ்ஞான வளர்ச்சியால் உருவாக்கப்பட்ட பாரிய எந்திரங்களைக்கொண்டு கடந்த நூற்றாண்டில் 2500 சதுர கிமீ நிலப்பரப்பைப் புதிதாகத் தோற்றுவித்துள்ளனர்.

இன்றைய நெதலாந்து 41,548 சதுர கிமீ நீர்நிலப் பரப்பைக் கொண்டது. இதன் தலைநகர் அம்ஸ்ரடாம். ஆட்சிநகர் ஹேக். குடித்தொகை 17,000,000க்கும் அதிகம். இடச்சு, பிரீசியன் ஆகிய நாட்டு மொழிகளோடு ஆங்கிலம், யேர்மன்(டொச்) ஆகியவையும் பேசப்படுகின்றன. பெரும்பான்மையானவர் உரோமன் கத்தோலிக்க சமயத்தவர்.

இதமான இடைவெப்பக் காலநிலையை அனுபவிக்கும் நெதலாந்து விவசாயத்திலும் கைத்தொழில் துறையிலும் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பாற்பண்ணைப் பொருட்கள், காய்கறிகள், பழவகைகள், பெற்றோலியப் பொருட்கள், இயற்கை எரிவாயு, இரசாயனப் பொருட்கள், எந்திர வகைகள், துணிவகைகள், இரும்பு, உருக்கு, பூக்கிழங்குகள் என்பன நெதலாந்தின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகும்.

நெதலாந்து என்றால் தாழ்நிலம் என்று பொருள். முன்னர் இது ஒல்லாந்து, பெல்சியம், இலக்சம்பேக் ஆகிய மூன்று நாடுகளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில், முதலில் பெல்சியமும் பின்னர் இலக்சம்பேக்கும் சுதந்திரம் பெற்றுக் கொள்ளவே, நெதலாந்து என்ற பெயர் ஒல்லாந்து மாகாணங்களையும் அதனைச் சூழ்ந்து வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மாகாணங்களையும் உள்ளடக்கிய





நெதலாந்து இராச்சியத்தையே(The Kingdom of Netherlands) என்ற நாட்டையே) சுட்டி நிற்கின்றது.

நெதலாந்தின் பாரம்பரியப் பெயர் Holland என்பதுதான். இது Holtland என்ற சொல்லில் இருந்து பிறந்தது என்பர். Holtland அல்லது Houtland என்றால் காட்டுநிலம் என்று பொருள். ஆதியில் ஒல்லாந்து காடுகளையும் சேற்று நிலங்களையும் அதிகம் கொண்டிருந்தது. நாடு நெதலாந்து என்ற பெயரைப் பெற்ற பின்னரும் ஒல்லாந்து என்ற பெயரும் பரவலாகப் புழக்கத்தில் உள்ளது.

ஒல்லாந்தர் பேசும் மொழி Dutch எனப்படும். அது மக்களையும் குறிக்கும். இடச்சுக் காரரைத் தமிழர் பொதுவாக ஒல்லாந்தர் என்றே அழைப்பர்.

---

ஆதார நூல்கள்:

Guide to Places of the World, The Reader's Digest Association Limited, 1987

Holland: English Edition, Herman Scholten, Bears Publishing, Almere

## 3. ஒல்லாந்தரும் ஈழத் தமிழரும்

இலங்கையிற் போத்துக்கேயர் ஆட்சி கி.பி. 1518 முதற் பரவத் தொடங்கியது. அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே ஒல்லாந்தரும் வரத் தொடங்கினர். இலங்கைக்கு முதல் வந்த ஒல்லாந்தர் ஸ்பில்பேக (Spilberg) என்ற கப்பல் தளபதி ஆவர். கி.பி. 1602 மே மாதம் 28ஆந் திகதி ஏழு கப்பல்களுடன் அவர் மட்டக்களப்பில் வந்திறங்கிப் பறங்கியரின் நான்கு கப்பல்களைக் கைப்பற்றினார். பறங்கியர் என்பது போத்துக்கேயருக்குத் தமிழர் வைத்த பெயராகும்.

ஸ்பில்பேக்கின் வருகை இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சி பரவ வழிவகுத்தது. ஒல்லாந்தர் கண்டி அரசனான விமலதர்மனுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு கொட்டியாரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிற் கோட்டைகளை அமைத்தனர். விமலதர்மனுக்குப் பின்வந்த அரசர்களும் போத்துக்கேயரை வெல்வதற்கு ஒல்லாந்தருக்கு உதவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். 1640ல் நீர்கொழும்பும் காலியும் கைப்பற்றப்பட்டன. இதே ஆண்டு விலம் யாக்கோப்சன் கோஸ்டர் (Willem Jacobson Coster) என்பவர் காலியில் தேசாதி பதியாக நியமனம்பெற்றதைத் தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஒல்லாந்தரின் ஆட்சி முறையாக தொடங்கலாயிற்று.

1652ல் ஒல்லாந்தருக்கும் போத்துக்கேயருக்கும் மீண்டும் போர் மூண்டது. கண்டியரசன் இராசசிங்கனின் உதவியுடன் 1656ல் போத்துக்கேயரைத் தோற்கடித்து களுத்துறையையும் கொழும்பையும் ஒல்லாந்தர் கைப்பற்றினர். இவ்விதம் இவர்களின் ஆட்சி இலங்கையிற் படிப்படியாக வலுப்பெற்று, 1658முதல் யாழ்ப்பாண மாநிலத்துக்கும் பரவலாயிற்று.

கொழும்பைக் கைப்பற்றியபின் நியமனம்பெற்ற தேசாதிபதி கொழும்பிலிருந்து ஆட்சி செய்தார். அவரின்கீழ் இரு அதிகாரிகள் இருந்தனர். ஒருவர் காலிப் பகுதியையும் மற்றையவர் யாழ்ப்பாணப் பிரிவையும் நிர்வகித்து வந்தனர். யாழ்ப்பாண அதிகாரியின்கீழ் மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியனவும் அடங்கியிருந்தன.

வன்னி நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, வன்னியர்களின் ஆட்சியில் விடப்பட்டிருந்தது. தொடக்கத்தில் வன்னித் தலைவர்கள் ஒல்லாந்தரால் மிகுந்த மதிப்புடன் நடத்தப்பட்டார்கள். மன்னார்ப் பகுதிகளாக இருந்த மாதோட்டம், நானாட்டான், முசலி ஆகிய ஊர்களும் வன்னியர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. 1692ல் பொதுமக்கள் விருப்பத்துக்கேற்ப பெருங்களிப்பற்று வன்னியர் ஆட்சியிலிருந்து எடுக்கப்பட்டு பூநகரிப் பிரிவுடன் சேர்க்கப்பட்டது. 1697ல் புதுக்குடியிருப்பு பேகன் விளாங்குளத்தோடும் கரிக்கட்டு மூலை மேற்பற்றோடுஞ் சேர்க்கப்பட்டு முள்ளியவளை தனிப்பிரிவு ஆக்கப்பட்டது.

ஒல்லாந்தர் பல இடங்களுக்குத் தமது நாட்டில் வழங்கிய பெயர்களை வைத்தனர். தீவுகளுக்கு அவர்கள் சூட்டிய பெயர்கள் சில பின்வருமாறு:

| | |
|---|---|
| காரைதீவு | - Amsterdam |
| ஊர்காவற்றுறை | - Kayts |
| தண்ணித்தீவு | - Leyden |
| புங்குடுதீவு | - Middleberg |





| | |
|---|---|
| நயினாதீவு | - Haarlem |
| அனலைதீவு | - Rotterdam |
| நெடுந்தீவு | - Delft |
| இரணைதீவு | - Hoon |

போத்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதிற் கண்ணாயிருந்தனர். சைவக் கோயில்களை இடித்து அழித்தனர். அழித்த இடங்கள் பலவற்றிலே தங்கள் கோயில்களைக் கட்டினர். உத்தியோகச் சலுகைகளைக் காட்டித் தமிழ் மக்களைக் கத்தோலிக்கராக மாற்றும் முயற்சிகள் தொடர்ந்தவாறிருந்தன.

ஒல்லாந்தர் தமது கிழக்கிந்திய கம்பனிக் கொள்கைப்படி வியாபாரத்தைப் பெருக்கிப் பொருளீட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் தொடக்கத்தில் சமய விருத்தியில் அதிக அக்கறை காட்டவில்லை. எனினும் காலப்போக்கில் தாங்கள் திருத்தியமைத்த கிறித்துவத்தைப் பரப்புவதிலும் ஈடுபட்டனர். போத்துக்கேயர் ஆட்சியில் கட்டப்பட்ட கத்தோலிக்க கோயில்களைத் திருத்தியும் புதுக்கியும் தமது கோயில்களாக்கினர். ஏனைய கோயில்களையும் மடங்களையும் அழித்தனர். கத்தோலிக்கரைத் தங்கள் சமயத்துக்கு மாற்றும் முயற்சிகளை எடுத்தனர்.

சைவர்கள் தமது சமய ஆசாரங்களை முற்றாக நீக்கிக் கிறித்தவ ஆலயங்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் செல்லவேண்டும் என்றும், பிள்ளைகள் கிறித்தவப் பள்ளிகளுக்குச் சென்று கிறித்தவ சமய பாடங்களைப் படிக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டனர். அதற்காகத் தமிழிலும் தமது சமய நூல்களை எழுதி வெளியிட்டனர். கிறித்துவத்துக்கு விரோதியாக இருப்பவன் தண்டிக்கப்படுவான் என்ற விதியும் இருந்தது. சைவப் பெண்களை மணந்த கிறித்தவர் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென பல்தேயஸ் (Baldeus) என்ற பாதிரியார் எழுதியிருக்கின்றார். இவர் 1658முதல் 1665வரை யாழ்ப்பாணத்திலிருந்து சமயசேவை செய்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் பிற சமயங்கள் குறித்த கடும் போக்கை நெகிழ்த்திக்கொண்டனர். மக்கள் புறத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவர்களாகவும் அகத்தால் தமது முன்னைய சமயப் பற்றாளர்களாகவும் இருந்தமையால் பலவந்தத்தினாற் பயனில்லையெனக் கண்டுகொண்டமை இந்த நெகிழ்ச்சிக்குரிய காரணங்களுள் ஒன்றாகும்.

இதன் பயனாக இவ்வளவு காலமும் மறைமுகமாகப் பின்பற்றப்பட்டு வந்த சைவ சமயம் வெளிப்படையாக வளரத்தொடங்கியது. 1791ல் வண்ணார்பண்ணையில் வைத்தீஸ்வரர் கோயில் கட்டிமுடித்துக் குடமுழுக்கு நடத்தப்பட்டது. பறங்கியரால் இடிக்கப்பட்ட பல சைவக் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

ஒல்லாந்தர் வணிக நோக்கமாகவே இலங்கைக்கு வந்தவர்களாதலால் என்னென்ன வழிகளிற் பொருளை ஈட்டமுடியுமோ அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தினர். யானைகளை இலங்கைக் காடுகளில் பிடித்தும் வன்னியரிடமிருந்து திறையாகப் பெற்றும் இந்திய அரசர்களுக்கு விற்றுப் பெரும் பொருள் ஈட்டினர்.

நெல் வேளாண்மை செய்ய மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணம், பூநகரி, மன்னார் ஆகிய பகுதிகளில் அதிக அளவு நெல் விளைவிக்கப்பட்டது. உள்ளூர்த் தேவைக்கு வேண்டியதுபோக மிகுதி இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட நெல் கொழும்பு, காலி போன்ற இடங்களில் விற்கப்பட்டது. இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான அடிமைகள் கொண்டு வரப்பட்டு வயல்வேலைகளில் அமர்த்தப்பட்டனர்.

போத்துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்தில் பருத்திச்செய்கை முக்கியத்துவம் பெற்றிருந்தது. மன்னார், பூநகரி ஆகிய பகுதிகளில் பருத்தி அதிக அளவில் வளர்க்கப் பட்டது. பருத்திச் செய்கையினால் புடைவை நெய்தல் சாயம் போடுதல் போன்ற தொழில்களும் வளர்க்கப்பட்டன. சாயவேர் வியாபாரமும் ஒல்லாந்தர் கையிலேயே இருந்தது. இவ்வேர்கள் காரைதீவு, மன்னார், வன்னிப் பகுதிகளிலுள்ள காடுகளிற் கிண்டி எடுக்கப்பட்டன.

நெடுந்தீவில் போத்துக்கேயர் தொடக்கி வைத்த குதிரை வளர்ப்பை





ஒல்லாந்தரும் தொடர்ந்தனர். பாரசீகம், சாவகம் போன்ற நாடுகளிலிருந்து நல்லினக் குதிரைகளை வருவித்து நெடுந்தீவிலும் இரணைதீவிலும் வளர்ப்பித்து இந்தியாவுக்கு விற்றுவந்தனர்.

முத்து, மரம், முருகைக்கல், மிளகு, பாக்கு போன்றவையும் வியாபாரப் பொருள்களாயின.

பிறநாடுகளிலிருந்து வந்த பித்தளை, துத்தநாகம், களிமண் பாத்திரங்கள், சீனி முதலியன உள்நாட்டில் விற்கப்பட்டன.

வியாபாரத்தோடு பலவிதமான வரிகள் மூலமாகவும் ஒல்லாந்தர் தமது வருமானத்தைப் பெருக்கினர். தலைவரி, நிலவரி, மரவரி, துறைமுகவரி, தென்னைவரி, புகையிலைவரி, புடைவைவரி, சந்தைவரி, தரகுவரி, தவறணைவரி என்று பலவகையான வரிகள் அறவிடப்பட்டன.

திருமணத்துக்கு மங்கல வாத்தியங்கள் பிடிப்பதற்கும் ஆபரணங்கள் அணிவதற்கும் வரிகட்டவேண்டும். இது விவாகவரி எனப்பட்டது. வரிகட்ட விரும்பாதவர்கள் விவாகத்தைப் பிள்ளையார் பூசையுடன் முடித்துக்கொள்வர். தாலி கட்டாமற் கூறைச்சேலையோடு மட்டும் நடந்த திருமணங்களும் உண்டு. விவாகவரியால் அரசுக்கு விரோதமாக மக்கள் நடக்கிறார்கள் என்பதை அறிந்ததும் அவ்வரியை ஒல்லாந்தர் நீக்கிவிட்டனர்.

தொடக்க காலத்தில் ஒல்லாந்தருக்கு மாட்டிறைச்சி பெறுவது கடினமாக இருந்தது. அதனால் மக்கள் பண்ணைகளிலிருந்து மாடுகளை வலிந்து பறித்து உண்டு வந்தனர். பின்னர் மாடுகளை வளர்ப்பவர் முறைவாரியாக மாடுகளைக் கொடுக்க வேண்டும் என்று சட்டமும் பிறப்பித்தனர். பிள்ளைபோல் வளர்த்த பசுக்களை இறைச்சிக்குக் கொடுக்க மனமில்லாமலும் பசுக்களைக் கொல்லக் கொடுப்பது மகாபாவம் எனக் கருதியும் கொடுக்கத் தவறினால் கிடைக்கக்கூடிய தண்டனையைப் பெற விரும்பாமலும் பலர் இந்தியாவுக்குச் சென்று குடியேறினர். அவ்விதம் சென்றவர்களில் ஒருவர்தான் திருநெல்வேலியைச் சேர்ந்த பெயர் பெற்ற சுவாமி ஞானப்பிரகாசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1726ஆம் ஆண்டில் வடபகுதியில் பெய்த புயல்மழையாற் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பயிர்களும் மாடுகன்றுகளும் அழிவுக்குள்ளாயின. மக்கள் பஞ்சத்தால் வாடினர். வெள்ளச் சேதங்கள் வரிப்பணங்களை அறவிடமுடியாத இக்கட்டான நிலையை அரசாங்கத்துக்கு உண்டுபண்ணின. இதுபோன்ற வெள்ளப் பாதிப்புகளை வருங்காலத்திற் சமாளிக்கும் பொருட்டு குளங்களைத் திருத்தியும் வாய்க்கால்களை அமைத்தும் வெள்ளநீர் கடலுக்கு வழிந்தோடும் வழிகளை ஒல்லாந்தர் செய்தனர்.

இவ்விதம் 1640ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பெரும் பகுதிகளில் நிலவிவந்த ஒல்லாந்தரின் ஆட்சி 15.02.1796ல் கொழும்பில் பிரித்தானிய படைகளுக்குத் தோல்வி யடைந்ததுடன் முடிவுக்கு வந்தது.

போத்துக்கேயருடன் ஒப்பிடும்போது ஒல்லாந்தரின் ஆட்சி அவ்வளவு கொடுமையானதல்ல என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

--------------------------------------

ஆதார நூல்கள்:

Outlines of Ceylon History, Donald Obeyesekere, Asian Educational Services, 1999

யாழ்ப்பாணச் சரித்திரம், செ. இராசநாயகம், ஏசியன் எடிக்கேஷனல் சர்வீசஸ், 1999

## சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு வாழ்த்து

சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் 81 ஆவது அகவை நாள் 07-01-2006ல் வருகிறது. எல்லாம் வல்ல துர்க்காதேவி அருளால் அவர் உடல் நலத்தோடு நீடு வாழ இந்து சமயப் பேரவையும் 'ஆத்ம ஜோதி' தியான நிலையமும் வாழ்த்துகின்றன.





## குடைச்சுவாமியின் குருபூசை

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமியின் குருபூசையை 5-3-2006 ஞாயிற்றுக்கிழமை அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் இந்து சமயப் பேரவைத் திருக் கூட்டத்தினர் திருவாசகம் முற்றோதி அபிசேக ஆராதனைகளுடன் கொண்டாட உள்ளனர். ஆன்மீக ஆர்வலர்கள் யாவரையும் வந்து கலந்து கொண்டு சுவாமியின் ஆசிகளைப் பெறுமாறு வேண்டுகின்றனர்.

## நினைவு அஞ்சலி



இந்து சமயப் பேரவை சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சங்கரப்பிள்ளை முத்தையா அவர்கள் 26-11-2005 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இந்து சமயப் பேரவை நிர்வாகிகளும் திருக்கூட்டத்தினரும் பிரார்த்திப்பதுடன் பிரார்த்தனை வைபவம் ஒன்றும் செய்யவுள்ளனர்.

## திருப்புகழ் முற்றோதல்

3-10-2005 சனிக்கிழமை தொடக்கம் 23-10-2005 ஞாயிற்றுக்கிழமை வரை பிரதி சனி, ஞாயிற்றுகிழமைகளில் திருப்புகழ் முற்றோதப்பட்டு அபிசேக ஆராதனைகளுடன் பூர்த்தி செய்யப்பட்டது.

## திருவெம்பாவை காலத்தில் திருவாசகம் முற்றோதலும், திருவாசக விழாவும்

4-1-2006 தொடக்கம் 13-1-2006 வரை பேரவையின் திருக்கூட்டத்தினரின் திருவாசகம் முற்றோதல் காலை 8:30 மணி தொடக்கம் மிகவும் பக்தி சிரத்தையுடன் நடைபெற்றது. பல அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஆருத்திரா தரிசனத்தன்று மாலை முற்றோதலைத் தொடர்ந்து திருவாசகவிழா நடைபெற்றது.

மேற்படி விழாவிற்கு பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் தலைமைதாங்கினார். முற்றோதலுக்கு ஒழுங்காகவந்த அடியார்களுக்கு மணிவாசகப் பெருமானின் படம் பதித்த கேடயம் பரிசாக வழங்கப்பட்டது. பங்குபற்றிய அனைவருக்கும் திருவாசகப் புத்தகமும் சான்றிதழ்களும் வழங்கப்படடன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அன்பு நெறி' ஆசிரியையின் மணிவிழா

அன்புநெறி ஆசிரியை திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களின் மணிவிழாவை கனடா சைவ சித்தாந்த மன்றத்தினர் கடந்த 25-12-2005 ஞாயிற்றுக்கிழமை மிக அடக்கமாகக் கூட்டு வழிபாட்டுடன் கொண்டாடினர்.

அன்றைய தினம் சைவ சித்தாந்த மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவும் கொண்டாடப்பட்டது.

கலாநிதி நா. சுப்பிரமணியன், அதிபர் திரு. பொ. கனகசபாபதி கவிநாயகர் வி. கந்தவனம், பேரறிஞர் முருகவே பரமநாதன் தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம் (இந்து சமயப் பேரவை) ஆகியோர் திருமதி வடிவழகாம்பாளின் அரும் பணிகளைப் போற்றியும் சைவசித்தாந்த மன்றத்தின் சேவைகளைப் பாராட்டியும் உரைகள் நிகழ்த்தினர்.

விழாவில் இலக்கிய கலாநிதி அமரர் பண்டிதர் மு. கந்தையா அவர்களின் சித்தாந்தச் செழும்புதையல் என்ற நூலும், அதன் கலாநிதி க. கணேசலிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பான Saiva Siddhanantha The Treasure Trove என்ற ஆங்கில நூலும் வெளியிடப்பெற்றன.







# அமரத்துவம் அடைந்து விட்ட ஆன்றோர் இருவர்

## அருட்கவி கலாநிதி சி. விநாசித்தம்பி



ஆசிரியர், அருட்கவி, பேச்சாளர், இறைபணியாளர் என்பவற்றிலும் சாத்திரியார் விநாசித்தம்பி அவர்களே மக்கள் மத்தியிற் பிரபலியமானவர். இறையருள் கொண்டு நினைத்த காரியத்தைச் சரியாகச் சொல்வதில் வல்லவர். இதனால் மக்கள் மத்தியில் அவருக்குத் தனியான பெருமதிப்பு இருந்தது.

இலங்கை முழுவதும் சமய நம்பிக்கையை வளர்த்தவர். பிறந்த பதியாகிய அளவெட்டிக்கும் புகழ்தேடிக்கொடுத்தவர். ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஆரம்பித்து வைத்த இந்து சமயப் பேரவைக்கு இறுதிவரை தலைவராக இருந்து சமயப்பணிகள் புரிந்தவர். சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி அ. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் திருத்தொண்டுகளுக்கும் உதவியாக இருந்தவர். இவரது ஆன்ம சாந்தி குறித்த பிரார்த்தனை ஒன்றை ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை ஒழுங்கு செய்யவுள்ளது.

## முத்தமிழ் வித்தகர் அ.பொ. செல்லையா



தாயகத்திலும் கனடாவிலும் அரிய தமிழ்ப் பணிபுரிந்தவர். தாயகத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கத்தோடு உழைத்தவர். சிறந்த அதிபர் என்ற சான்றிதழையும் கல்வி அமைச்சிடமிருந்து பெற்றவர். இலங்கையிலேயே முதன்முதல் திருவள்ளுவர் பெருமானுக்குச் சிலை எடுத்த பெருமை இவருக்கு உண்டு.

கனடாவிலும் திருக்குறளின் பெருமையை எடுத்துரைத்து வந்தவர். நல்ல பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர், கனடிய மனித உரிமைச் சாசனத்தைத் தமிழில் தந்த சிறப்புக்குரியவர்.

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் பணிகளுக்கும் துணையாக இருந்தவர். பேரவை ஆண்டுதோறும் நடத்திவரும் திருமுறைப் போட்டிகளுக்கும் பேச்சுப் போட்டிகளுக்கும் நடுவராகத் தொண்டாற்றியிருக்கின்றார்.

அவரது ஆன்மசாந்திக்காக இந்து சமயப்பேரவை பிரார்த்தனை ஒன்றை ஒழுங்குசெய்யவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம்

1 பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத பண்புடைமை, அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற பொதுநோக்கு என்னும் இரண்டினையும் உலகுக்குக் கற்பித்த சமயம் எமது இந்து சமயமாகும்.

2. கடலோடு ஆறு இரண்டறக் கலந்த பின் ஆறு என்ற பெயரை இழந்து கடல் என்ற பெயரையே பெறுகின்றது. இதேபோன்று ஆன்மா பரம்பொருளோடு இரணடறக்கலந்த பின் தம் பெயரிழந்து பரம்பொருளியல்பைப் பெற்றுவிடுகின்றன.

3. முற்காலத்தில் கடவுள் பக்தி உலகம் முழுவதுமே இருந்தது. இன்று அரசியல், புத்திவாதம் ஆகியன அதிகமாகிவிட்டதால் தேசங்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் பெரிய கோளாறுகள் இருப்பதைக் காண்கிறோம்.

4. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பது தமிழனுடைய கோட்பாடு. இது எங்கே பிறந்ததோ அங்கே அவனால் நிம்மதியாக உயிர்வாழ முடியவில்லை.

5. நமது முன்னோர் உலகத்தை வைத்தே பல கருமங்கள் ஆற்றினார்கள். அவர்களில் நான் எனது வீடு, எனது நாடு, எனது சாதி, என்ற சிறுமைகள் ஒழிந்து உலகம் என்ற பரந்த மனப்பான்மையே வளர்ந்திருந்தது.

6. அன்பே சிவம் என்பது திருமூலர் கூற்று. தன்னைத்தான் நேசிப்பது கூட ஒருவித அன்பே. அது மிகவும் சுருங்கிய அன்பு. இவ்வன்பு விரிந்து விலாசம் அடைய அடைய மனிதன் மேல் நோக்கிச் செல்கின்றான். தன் உயிர்போல் மன்னுயிரையும் நேசிக்கின்றான். பிறர்க்காகத் தன்னையும் விட்டுக் கொடுக் கின்றான். மிகவும் உயர்ந்த பண்புள்ள மனிதன் கணப்பொழுதும் அன்பினாலேயே உயிர்வாழ்கின்றான். பிறர்க்காகத் தான் அடையும் துன்பங்களிலும் பிறரால் தனக்கு விளைவிக்கப்படும் துன்பங்களிலும் அவை எப்பேர்ப்பட்ட துன்பங்களாக இருந்தாலும் சரி அவன் இன்பத்தையே காண்கின்றான்.

7. பொதுவாகச் சமயம் என்பது நம்மை யார் என உணரவைக் கின்றது. நமக்குள்ள துன்பங்கள் யாவை என்பதைப் புலப்படுத்து கின்றது. அத்துன்பங்கள் ஏன் நேர்கின்றன என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அவற்றை களைவதற்கு வழிகள் யாவை என்றும் கூறுகின்றது.





8. தம்மை நாடி வந்தோரைஅணைத்து வாழுதுலும் தாம் செல்லும் இடங்களில் அவர்களோடு சேர்ந்து வாழுதலும் இந்துக்களின் தனியான பண்பாகும்.

9. இயற்கையில் உண்டாகும் புயலைவிட மனதில் உண்டாகும் புயல் மிகமிகக் கொடுமையானது. மனநோயால் ஏற்படும் புயல்தனிமனிதனை அழிக்கும். மனப்பேயால் ஏற்படும் புயல் மனித இனத்தையே அழிக்கும். மனப்பேய்க்குக் காரணம் தான் என்னும் திமிர் உணர்வேயாகும். மனமே ஆறாவது அறிவு. பகுத்தறிவு என்னும் ஆயுதத்தால் மனத்தைத் தெளியவைத்து மனப்பேயைத் துரத்தினால் சீராக வாழமுடியும்.

10. ஒவ்வொருவரும் தமக்காக உள்ளனர். கடவுள் ஒருவரே எல்லோருக்குமாக உள்ளார். நெஞ்சமே நல்ல கையேடு பட்டறிவே சிறந்த ஆசிரியர். உலகமே பல்கலைக்கழகம். கடவுளே சிறந்த ஆசிரியர் - குரு.

11. முன்செய்த கர்மத்தின் ஒரு பகுதியை அனுபவிக்க வந்த மனிதன் இதனை அனுபவிக்கும் பொழுது புதிய கர்மங்களையும் தேடிக் கொள்கின்றான்.

12. மனிதனுடையதும் மற்றுமுள்ள சீவராசிகளினதும் ஆயுட்கணக்கு அவர்கள் விடுகின்ற மூச்சைக் கொண்டே கணக்கிடப்படுகின்றன. நம்முடைய ஆயுட்கணக்கு நம்முடைய மூக்கின்வழியாக நடந்து கொண்டிருக்கும் மூச்சேயாகும்.

13. மனிதனின் ஒவ்வொரு மூச்சோடு ஒவ்வொரு எண்ணம் பிறந்து அழிகின்றது.

14. நிமிடத்திற்கு பதினைந்து மூச்சுக்கள் ஆறுகின்றன. மணிக்கு அறுபது நிமிடங்கள் ஆகையால் மணிக்கு 900 மூச்சுக்கள் ஆறுகின்றன. நாள் ஒன்றுக்கு 24 மணித்தியாலங்கள் ஆனபடியினால் 21600 மூச்சுக்கள் மனிதன் ஒருநாளைக்கு வெளிவிடுகின்றான்.

15. மூச்சென்னும் நூல் நமது மூக்குத் துவாரங்களிலிருந்து அறுபடமுன்னமே நாமெல்லோரும் இறைவனை இடைவிடாது பிரார்த்தித்து இறைவனின் திருவடியை அடைய முயல வேண்டும்.

16. ஒரு ஜீவனை ஈடேற்றுவதற்காக எத்தனைமுறை என்றாலும் பிறவி எடுக்கத் தயார் என்று கூறிய விவேகான்நதரின் உள்ளத்தை காயத்திரிசுவாமிகளிடம் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org